Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU






முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 11 புதன்கிழமை (26.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 087

















# பரிந்துரைகளை அமுலாக்க தவறிவிட்டது அரசு

## ஐ.நா.விடம் முறையிட கூட்டமைப்பு முடிவு



(கொழும்பு)

நாட்டில் தொடரும் மனித உரிமை மீறல்கள் குறித்தும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை முழுமையாக அமுல் செய்யப்படாமை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நா.சபையில் அறிக்கை சமர்ப்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா.வின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வின்போது இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள மேற்படி ஐ.நா.வின் மனித உரிமைகள் பேரவை அமர்வின் போது, அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தங்கள் வசமுள்ள அறிக்கை முன்வைப்பதற்கு தாம் தயாராக உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளார் என சிங்கள இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அத்துடன் மனித உரிமைப்பேரவை அமர்வில் தங்களுக்கு கிடைக்கக் கூடிய ஒவ்வொரு வாய்ப்பினையும் நாங்கள் பயன்படுத்திக் கொள்ளவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார் என அந்த இணையம் கூறியுள்ளது.

இதற்காக நாட்டில் நடைபெற்ற மனித உரிமை மீறல் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் திரட்டித் தமது அறிக்கையைத் தயாரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உற்சாகமாகக் கழிந்தது நத்தார்தினக் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் விட்டு விட்டு மழை பொழிந்த போதிலும் மக்கள் நத்தார் பண்டிகை நிகழ்வை அதீத ஆடம்பரமின்றி அமைதியாகக் கொண்டாடினார்கள். கத்தோலிக்க ஆலயங்களில் நேற்று முன்தினம் நளளிரவு யேசுபாலன் பிறப்பு ஆராதனை நிகழ்வுகளைத் தொடர்ந்து மக்கள் இந்த நத்தார் பண்டிகை நிகழ்வுகளில் ஈடுபட்டனர். வெடி

19 ஆம் பக்கம் பார்க்க

## போதைப்பொருள் வர்த்தகம் மன்னாரில் அமோகம்

### கடற்படையினரின் ரோந்து அதிகரிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலின் மத்திய நிலையமாக மன்னார் நகரம் மாறிவருகிறது. பொலிஸாரின் அனைத்துச் சோதனை நடவடிக்கைகளையும் தாண்டி பெரும் எடுப்பிலான போதைப் பொருள் வர்த்தகம் மன்னாரில் தாராளமாக இடம்பெற்று வருகிறது. மன்னார் - கல்லடித்தீவு கடற்கரை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 905 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை கடற்படையினர் மீட்டுள்ளதாக

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கில் கல்வித்துறை சார்ந்த நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் புதிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்தும் வளங்களைச் சமச்சீராகப் பகிர்ந்து கொள்வது குறித்தும் அதீத கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் இதன் முதற்கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள கல்வி அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதன்போது யாழ். மாவட்டத்தில் மட்டுமல்லாது வடமாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்

19 ஆம் பக்கம் பார்க்க

## திருப்தியற்ற வரவு – செலவுத்திட்டம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு

### கரவெட்டிப் பிரதேச சபையில் இழுபறி

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச சபை வரவு - செலவுத் திட்டம் பெரும் அமளிதுமளிக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன. இதன்போது பிரதேச சபை உறுப்பினர்கள் தமக்குரிய ஒதுக்கீடுகளைச் சரியான முறையில் பகிர்வதில்லை எனவும் குறிக்கப்பட்ட தேவைகளுக்கு நிதி வழங்கப்படவில்லை எனவும் தொடர்ந்தும் உதவிகள் சில நிறுவனங்களுக்கே வழங்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் வெளிநடப்புச் செய்ய முற்பட்டார். இவ்வாறு பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில கரவெட்டிப் பிரதேச சபையின் வரவு - செலவுத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது. (18,116)

## தொடரும் பணிப் பகிஷ்கரிப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் காது, மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சை நிபுணர் திருமாறன் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் திட்டமிட்டபடி நேற்று ஒருமணி நேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். நேற்றுக் காலை 8.00 மணி முதல் 9.00 மணிவரை அவர்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அவர்கள் தொடர்ந்து இந்த ஒரு மணிநேரப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளமை தெரிந்ததே. (பா)

## முறிகண்டியில் கோர விபத்து; பத்துப் பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் முறிகண்டிப் பகுதியில் பிரதான வீதியில் நேற்றுக்காலை இராணுவ கன்ரர் ரக வாகனமும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வாகனமொன்றும் மோதி விபத்திற்குள்ளாகியதில் சுமார் பத்துப்பேர் வரை காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக

19 ஆம் பக்கம் பார்க்க

## குருநகரில் கோஷ்டி மோதல் பொலிஸார் மீதும் தாக்குதல்

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது குருநகரில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மீனவர் ஒருவர், பொலிஸ் உத்தியோகத்தரின் தலையில் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியுள்ளார். தாக்குதலுக்கு இலக்கான பொலிஸ் உத்தியோகத்தர் வைத்திய

19 ஆம் பக்கம் பார்க்க

# ஏ-9 வீதியோரங்களில் வசிப்போருக்கு டெங்கு நோய் பரவும் அபாயம்


(கிளிநொச்சி)

யாழ். கண்டி ஏ-9 வீதியோரங்களில் வசிப்போர் டெங்கு நோய் தொற்றுதலுக்கு உள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வீதி நிர்மாணப் பணிகளில் வீதியோரம் மழைத் தண்ணீர் வடிவதற்கென அமைக்கப்பட்ட வாய்க்கால்களில் கற்கள் சரியாகத் துப்புரவு செய்யப்படாமையால் தண்ணீர் தேங்கி நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பொலிஸாரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் தனியார் வியாபார நிலையங்கள், உணவகங்கள், பொதுமக்களது வீடுகளின் சுத்த நிலையைப் பரிசீலித்து குற்றங்களைக் கண்டுபிடித்து நீதிமன்றில் முற்படுத்துகின்றனர். ஆனால் இது தொடர்பாக எதுவும் கண்டு கொள்வதில்லையென பொதுமக்களாலும் சமூக ஆர்வலர்களாலும் குற்றம் சாட்டப்படுகிறது.

பிரதேச சபைகள் நகர சபைகள் போன்ற உள்ளூராட்சி நிறுவன அமைப்புக்களும் இதுபற்றி கண்டுகொள்வதாகத் தெரியவில்லையெனவும் அவர்கள் குறை கூறுகின்றனர்.

இவ்வீதி வடிகாலமைப்புக்கள் ஒழுங்காக சுத்தம் செய்யப்படாமல் போனால் வருடம் முழுவதும் நுளம்புப் பெருக்கத்தினால் அவதிப்படும் நிலை தொடருமெனவும் கவலை தெரிவிக்கின்றனர். தற்போது பருவ மழை மீண்டும் பொழியும் நிலையில் நுளம்புகளாலான நோய்த் தொற்றுக்கள் மிக அதிகளவில் ஏற்படுமென அச்சம் தெரிவிக்கும் நிலையில் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் இது குறித்து உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (90)



திருநெல்வேலி கிழக்கு கலைச்சுடர் சனசமூக நிலையத்துக்கு அருகிலுள்ள கிராம மக்களுக்கு பல வருடங்களாக மின்னிணைப்பு இல்லாத நிலையிலும், இப்பகுதியில் 20 குடும்பங்களுக்கு மின்னிணைப்பு வழங்குவதற்கு ஏற்பாடு செய்து இதற்கான ஒழுங்குகளை நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன் மேற்கொண்டு வருகிறார். இதற்கான விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இலங்கை மின்சாரசபையிடம் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பொதுச்சபைக் கூட்டம்

(மானிப்பாய்)

மானிப்பாய் கோயில்பற்று ப.நோ.கூ.சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு சங்கத் தலைவர் க.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட அங்கீகாரம் பெறுதல், உச்சக் கடன் எல்லை, தனியார் கடன் எல்லை பற்றித் தீர்மானித்தல், சங்கக் கடன் எல்லை தொடர்பாக ஆராய்தல், கூட்டுறவு நிதிக் கடன் பெற்று சங்கத்தின் அரைக்கும் ஆலை அமைப்பதற்கான அனுமதி கோரல், 2008 ஆம் ஆண்டுக்குப் பின் சேர்ந்த புதிய அங்கத்தவர்களுக்கான பொதுச்சபையின் அங்கீகாரம் தொடர்பான பல விடயங்கள் ஆராயப்படவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல உறுப்பினர்களையும் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

# விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு யாழ். மாநகர சபை நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு யாழ். மாநகர சபை 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

நேற்று யாழ். மாநகர சபையில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்ற டிசம்பர் மாதத்திற்கான பொதுக்கூட்டத்திலேயே யாழ். மாநகர சபை விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஆர்வம் மிக்கவர்களாக வளர்த்தெடுப்பதுடன், விளையாட்டுத் துறையில் பல்வேறு சாதனைகளையும் நிலைநாட்டுவதற்காகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் யாழ். மாநகர சபை விளையாட்டுத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பிரேரணை ஒன்றை சபையில் முன்வைத்ததை அடுத்து அந்தப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இதற்கென 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக யாழ். மாநகர விளையாட்டுத் துறைத் தலைவர் எஸ்.ரமணன், மாநகர விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிதியின் மூலமாக மாநகர சபையின் விளையாட்டுத் துறை அலுவலகத்தைப் புனரமைக்கவும் பழு தூக்கும் பயிற்சி நிலையத்தை அமைக்கவும் ஏனைய விளையாட்டுத் துறை உபகரணங்களைக் கொள்வனவு செய்யவும் இந்த நிதி செலவிடப்படவுள்ளதாகவும் மேலும் தெரிய வருகின்றது. (பா)

# கரைச்சி பிரதேச சபையை கண்டித்து வர்த்தக சங்கம் கடையடைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை தங்களுக்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தராததைக் கண்டித்து பரந்தன் வர்த்தக சங்கத்தினர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கடையடைப்பொன்றை நடத்தவுள்ளனர்.

மேற்படி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வர்த்தகர் சங்கத்தின் பொதுச்சந்தை மற்றும் கடைகளுக்கு வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவில்லை எனவும், பொதுச்சந்தை பல குறைபாடுகளுடன் இயங்கிவரும் நிலையில் அக்குறைபாடுகள் குறித்து உரியவர்களுக்கு பல முறை தெரியப்படுத்தியும் இதுவரை அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததைக் கண்டித்தும் இக்கடையடைப்பு இடம்பெறவுள்ளதாக வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது. (கே)

# உளவளத்துணை தொண்டர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

உளவளத்துணை பயிற்சி பெற்ற தொண்டர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கம் (NAHRO) கிளிநொச்சி கிளையின் தலைவர் த.குருகுலராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அத்தியட்சகர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக கரைச்சி பிரதேச செயலகத்தின் சமூக உளவளத்துணையாளர் திருமதி. ச.கவிப்பிரியா கலந்து சிறப்பிக்க உள்ளார்.

இவ் உளவளத்துணைப் பயிற்சி நெறியை கிளிநொச்சி NAHRO நிறுவனமும், மட்டக்களப்பு மயிலம்பாவெளி உளநல உதவிப் பயிற்சி நிலையமும் (PPCC) இணைந்து நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (90)

## போக்குவரத்து சபை யாழ். சாலையில் ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபை யாழ். சாலையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு சாலை முகாமையாளர் தலைமையில் ஒளிவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# அரச அலுவலகங்களில் தமிழ் கிளி. தமிழ்ச் சங்கம் முன்னெடுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரச அலுவலகங்களில் தமிழ் நடைமுறைப்படுத்தப்படுவதை ஊக்குவிக்க கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

2012 ஆம் ஆண்டு இது தொடர்பான வேண்டுகோள் முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறு முன்னெடுத்ததில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் அரச' திணைக்களங்களின் அனுசரணையைப் பெற்று தமிழை நடைமுறைப் படுத்துவது தொடர்பான வேண்டுகோளை தமிழ்ச் சங்கத்தின் தலைவர் வே.இறைபிள்ளை கடிதம் மூலமாக விடுத்துள்ளார்.

2012 ஆம் ஆண்டில் பதவிப் பெயர்களில் தமிழ் பயன்படுத்தப்பட்ட போதும் அலுவலகக் கோவைகளில் தமிழ் முறையாகப் பயன்படுத்துவதில் முன்னெடுப்புக்கள் போதியளவு மேற்கொள்ளப்படவில்லையெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் 2012 ஆம் ஆண்டில் தமிழ் நடைமுறைப்படுத்தல் போட்டியை நடைமுறைப்படுத்த முடியவில்லையெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் திருக்குறள் மாநாட்டிற்கு முன்பாக தமிழ் நடைமுறைப் படுத்தல் போட்டியை நடத்த விளைவதால் போதுமான ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (90)



இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் இணைந்து கிளிநொச்சியில் நடத்திய வடமாகாண கடல் வீரர் பாராட்டு விழாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.சோமசுந்தரம், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ஆர்.கேதீஸ்வரன், பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.நீல் தளுவத்த ஆகியோர் உரையாற்றுவதையும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பிரதிப் பொது முகாமையாளர் திருமதி கிசோலி பெரேரா கடல்கடந்த வீரர்களின் பிள்ளைகளுக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (01)

# யாழ்.பல்கலை தனது தொலை நோக்கை நிறைவேற்றப் பாடுபடவேண்டும்

## – சிரேஸ்ட ஊடகவியலாளர் வேல்தஞ்சன்




புறக்கணிப்புக்கள் செய்து பல்கலைக்கழகத்தை மூடிவிட்டு ஏதேதோ காரியங்கள் செய்துகொண்டிருப்பதை விடுத்து, கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சிச் செயற்பாடுகளில் முதன்மையாகத் திகழ்வது என்ற தனது தொலைநோக்கை நிறைவேற்றுவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பாடுபடவேண்டும் என்று சிரேஷ்ட ஊடகவியலாளர் க.வேல்தஞ்சன் வேண்டுகோள் விடுத்தார்.

நான்காவது வாரமாக வகுப்புப் புறக்கணிப்புச் செய்து தமது கல்வியைப் பாதிப்படையச் செய்துவரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களது செயற்பாடுகள் தொடர்பாக டான் தொலைக்காட்சியின் 'இன்றைய(24-12-2012) பத்திரிகைப் பார்வை' நிகழ்ச்சியின் ஊடக ஆய்வாளரும், சிகரம் நிறுவனப் பணிப்பாளருமான கோ.றுஷாங்கன் நேயர்களின் தொலைபேசி உரையாடல்களூடாக ஆய்வு செய்துகொண்டிருந்தபோதே, சிரேஷ்ட ஊடகவியலாளர் க.வேல்தஞ்சன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்தக் கருத்தை முன்வைத்தார்.

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி, புலமைப்பரிசில் ஆகிய விடயங்களில் முதன்மையான நிறுவனமாகச் செயற்படுவது என்ற தொனிப்பட்ட தொலைநோக்கை யாழ். பல்கலைக்கழகம் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டிய வேல்தஞ்சன், இந்தத் தொலைநோக்கை நிறைவேற்றுவதற்காகப் பாடுபடுவதா அல்லது வெறுமனே பல்கலைக்கழகத்தை மூடிவிட்டு தேவையற்ற காரியங்களைச் செய்துகொண்டிருப்பதா என்பதை யாழ். பல்கலைக்கழகம் தீர்மானிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தேசிய, சர்வதேச ரீதியாக சமூகத்தின், குறிப்பாக வடக்கு மாகாணத்தின் சமூக, பொருளாதார, கலாசார தேவைகளை நிறைவேற்றும் வகையில், புலமைசார், தொழில்முறைத் தேர்ச்சி மிக்க, தகைமையுள்ள பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் தரமான கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சிச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் முன்னணி புலமை நிறுவனமாகத் திகழ்தல் என்று தனது பணிநோக்கிலும் தெரிவித்திருக்கும் யாழ். பல்கலைக்கழகம், இவற்றைச் செய்வதூடாக, தமது தொலைநோக்கை எட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டியதே தற்போதைய அவசிய, அவசர தேவையாக உள்ளது என்று வேல்தஞ்சன் இதன்போது வலியுறுத்தினார்.

பல தனியார் நிறுவனங்களும் செய்வது போன்று, யாழ். பல்கலைக்கழகத்தின் இந்தத் தொலைநோக்கையும், பணிநோக்கையும், பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள் அனைவரும் புரிந்துகொள்ளச் செய்வதற்கான செயலமர்வுகளை நடாத்தி, தனது தொலைநோக்கை நிறைவேற்றும் பணியில் யாழ். பல்கலைக்கழகம் ஈடுபட வேண்டும் என்று இதன்போது ஆய்வாளர் றுஷாங்கனும வேல்தஞ்சனின் கருத்தை ஆதரித்துப் பேசினார்.

**வளாகத்தை எதிர்த்தவர்களே இன்றும் குழப்புகிறார்கள**

யாழ்ப்பாணத்துக்கு 1974ம் ஆண்டு பல்கலைக்கழக வளாகம் ஒன்று கிடைத்தபோது, தமிழ்க் காங்கிரசுடனான கட்சிப் போட்டி காரணமாக அதனை எதிர்த்துப் போராட்டம் நடத்திய தமிழர் விடுதலைக் கூட்டணியின் வழித்தோன்றலகளே இன்றும் யாழ். பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய போராட்டங்களை நடத்துகிறார்கள் என்று, இந்த நிகழ்ச்சியில் தொடர்புகொண்டு பேசிய இராமச்சந்திரன் என்ற நேயர் சுட்டிக்காட்டினார். இவர்களது சதிவலையில் சிக்காமல் பல்கலைக்கழக மாணவர்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இராமச்சந்திரனின் இந்தக் கருத்தை ஆதரித்துப் பேசிய ஆய்வாளர் றுஷாங்கன், தமிழ்க் கூட்டணியினரின் எதிர்ப்புக்குச் செவிமடுத்து யாழ்ப்பாணத்தில் வளாகம் ஆரம்பிக்கும் முயற்சியை அன்றைய சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் கைவிட்டிருந்தால், இன்று யாழ்ப்பாணத்துக்கு ஒரு பல்கலைக்கழகமே இருந்திருக்காது என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு வரமாகக் கிடைத்த பல்கலைக்கழக வளாகத்தை அன்று எதிர்த்தவர்கள், இன்று வடக்கு மாகாணத்தின் ஒரே உயர்கல்வி நிறுவனமாக உயர்ந்து பொறியியல் பீடத்தையும் உருவாக்கிவரும் யாழ். பல்கலைக்கழகத்தை தமிழ் மக்களின் சாபமாக மாற்றுவதற்கு முயன்று வருகிறார்கள். ஒரு சில அரசியல்வாதிகளதும், அவர்கள் நடாத்தும் ஊடகங்களினதும் செயற்பாடுகளுக்குப் பலியாகி தமது கல்வியையும், பல்கலைக்கழகத்தையும் பாழடிப்பதா? என்பதை மாணவர்கள் சிந்திக்கவேண்டும் என்று றுஷாங்கன் மாணவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

**மாணவர்களின் நிலைக்கு ஊடகங்களே பொறுப்பு**

இதன்போது தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட மற்றுமொரு நேயரான கரன், கைதுசெய்யப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் மாணவர்கள் தொடர்பாக அண்மையில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியின் தலைமையில் பலாலியில் பேச்சுக்கள் நடாத்தப்பட்டபோது, ஊடகங்களிடம் பேசுவதற்கு அங்கு வந்திருந்த கைதுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோர் மறுப்புத் தெரிவித்ததுடன், ஊடகங்களே தமது பிள்ளைகளின் இந்த நிலைக்குக் காரணமாக அமைந்திருப்பதாகக் குற்றஞ்சாட்டியதாகவும் குறிப்பிட்டார்.

'நீங்கள் இதுக்குள்ளை தலைப்போட்டுத்தான் எங்கடை பிள்ளைகள் இப்ப கைதுசெய்யப்பட்டிருக்கினம். நீங்கள் சும்மா இருந்தால்தான் எங்கடை பிள்ளைகளுக்கு விமோசனம் கிடைக்கும். தயவுசெய்து எங்கடை பிள்ளைகளை பிறகும் தொந்தரவு செய்யாதீர்கள்' என்று பெற்றோர் இதன்போது ஊடகவியலாளர்களிடம் கோபத்துடன் தெரிவித்தனர் என்றார் கரன்.

பல்கலைக்கழகச் சம்பவத்துக்குப் பின்னணியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இருப்பது தமக்குத் தெளிவாகத் தெரியும் என்று படைத்தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித்ததாகவும், எனினும், அவருடைய பெயரை குறிப்பிடத் தான் விரும்பவில்லை என்று அவர் கூறியதாகவும் கரன் கூறினார்.

# வாரிவனேஸ்வரம் ஆலய மஹோற்சவப் பெருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்சுவாமி வாரிவனேஸ்வரம் ஆலய சிவன் மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி காலை 11 மணிக்கு கொடியேற்றத்திருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்ததிருவிழாவும் நடைபெறவுள்ளது.

கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் பிரதம குருவாக பூசைகளை ஆற்றவுள்ளனர்.

மேலும் விசேடமாக வியாழக்கிழமைகளில் தட்சணா மூர்த்தி, குருபகவான் வழிபாடும், சனிக்கிழமைகளில் சனி பகவான் வழிபாடும், ஞாயிற்றுக்கிழமைகளில் ராகு, கேது வழிபாடும் மஹோற்சவகாலங்களில் நடைபெறவுள்ளது. (இ)

# நயினாதீவு அபிவிருத்திக்கு 10 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

(நயினாதீவு)

தீவகத்தின் நயினாதீவு பிரதேசத்தின் பல்வேறுபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென வேலணைப் பிரதேச சபையினால் 10 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தீவகத்தின் 3 பிரதேச சபைகளான வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு ஆகிய பிரதேச சபைகளுக்கு தலா 100 கோடி ரூபா நிதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இந்நிதி விஷேடமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட 5 உப அலுவலர்களின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வேலணைப் பிரதேசசபைக்கு ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாவில் நயினாதீவு பிரதேசத்திற்கு 10 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம் நயினாதீவு பிரதேசத்திலுள்ள நயினாதீவு வங்களாவடி மலையின் ஐயனார் வீதி திருத்தம், நயினாதீவு கிழக்கு கடற்கரை தடுப்பணை திருத்தம், நாவலடி பிடாரியம்மன் வீதி புனரமைப்பு, கேணிக்குழி வீதி புனரமைப்பு, நயினாதீவு பொதுநூலகம் நிர்மாணித்தல், நயினாதீவு மேற்கு கடற்கரை வீதி புனரமைத்தல், நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தில் வெளிச்ச வீடு அமைத்தல் போன்ற அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (175)




நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வின் போது கலைநிகழ்வு இடம்பெறுவதையும், கலந்து' கொண்ட அலுவலர்களையும் காணலாம். (26)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நாம் எச்சரிக்கையோடு இருப்போம்!

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இதே நாளில்தான் இயற்கையின் கடுஞ் சீற்றத்தை, திடீரென நாம் திகைத்துப் போகுமளவுக்குப் பிரமாண்டமாய்க் கண்டு வெலவெலத்தோம். நம் நாட்டில் மட்டுமல்ல, தெற்காசியாவின் கரையோரங்களையெல்லாம் தாக்கி, ஒரே நாளில் பல லட்சக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்துச் சென்றது ஆழிப்பேரலை.

கடலின் சுனாமிக் கோபத்தை நாம் நேரடியாகக் கண்டு எட்டு வருடங்கள் கடந்துவிட்டன. அதன்பிறகு சுனாமியின் தாக்குதலுக்கு அடிக்கடி இரையாகும் ஜப்பானில் சென்றவருடம் மார்ச் மாதத்தில் அதன் ஆக்ரோசத்தின் பேரளவை மறுபடி அறிந்தோம். இயற்கைக்கு முன்னே நாம் எவ்வளவு சிறிய மனிதர்கள் என்றுணர்ந்து பதறினோம். மனிதர்கள் உருவாக்கிய அணு உலைகள் வெடித்து உலகில் கணிசமான பகுதி பாதிப்புக்குள்ளாகி விடுமோ என்று பயந்தோம்.

2004 இல் நம் நாட்டில் தாக்கிய சுனாமியிலும் சென்றவருடம் ஜப்பானில் தாக்கிய சுனாமியிலும் அலை எழுந்த உயரம் சுமார் 30 மீற்றர் வரை என்று கண்டிருக்கிறார்கள். 1958 இல் அமெரிக்காவிலுள்ள லித்துயா கடலில் உருவான சுனாமிதான் உலகிலேயே மிகப்பெரிய சுனாமி. இதன் அலை உயரம் 520 மீற்றர் வரை இருந்ததாம்.

இயற்கை அவ்வப்போது பொங்கி, நம் உயிர்களின் பெறுமதி பற்றி நமக்கு இடித்துரைத்துச் செல்கிறது. சுனாமிக்குக் காரணமாக, பூமியின் அச்சுகள் நகர்கின்றன உள்ளே. நாம் இன்னும் பூமியின் மேலே எல்லைக்கோடுகளை வரைந்து கொள்வதிலேயே குறியாயிருக்கிறோம். இயற்கையின் அத்தனை அழிப்பு முயற்சிகளுக்கும் அப்பால், மனிதர்களாகிய நாம், நம்மை நாமே அழித்துக் கொண்டதுதானே அதிகம்!

எந்த சுனாமியிலிருந்தும் அழிவிலிருந்தும் நாம் பாடம் கற்றுக்கொள்ளவில்லை; கற்றுக்கொள்ள மறுத்தும் வருகிறோம். எத்தனை எத்தனையோ அற நீதிகள், அகிம்சா போதனைகளுக்கு மத்தியிலும் நிகழ்ந்து கொண்டிருக்கும் கொலைகளின் எண்ணிக்கையை வைத்துப் பார்க்கும்போது, மனிதர்கள் நாம் வாழ்வதற்கல்ல, ஒருவரையொருவர் கொன்று கொள்வதற்கே காரணங்களைத் தேடி வருவதாகத் தென்படுகிறது.

நம் தரப்பை ஏற்காதவர்களைக் கொன்று, நாம் வாழ்வது என்கிற ஏற்பாடு அல்லது நமது தர்மத்துக்குப் புறம்பாக உள்ளவர்களை அழித்து நாம் ஜெயித்தல் என்பதுதான் இன்றைக்கும் நம்மிடமுள்ள 'வாழ்தல்' அறமாக இருக்கிறது. மொழி, இனம், தேசியம் போன்ற இன்னோரன்னவை அழிந்துவிடாமல் இருப்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களை அழிக்க நாம் எப்போதும் தயார்.

மொழிக்காக, குலத்துக்காக, மதத்துக்காக, தேசியத்துக்காக என்று வரலாற்றில் அனேகம் போர்கள் நடந்து முடிந்திருக்கின்றன. இயற்கை அழிவுகள் தந்த உயிரிழப்புகளை விட இந்தப் போர்களும், மனிதர்களிடம் பொங்கும் விரோதமும் அழித்தவையே அதிகம். மனித இனம் அமைதியாகவும் சுபிட்சமாகவும் வாழும் வழியை இவைகள் தந்துவிடவில்லை.

ஹிட்லரின் வதைமுகாமில் மரணத்தின் விளிம்பு வரை சென்று உயிர் தப்பிய விக்டர் பிராங்கல் என்ற உளவியலாளர் பின்னர் எழுதினார்: "மனிதன் என்னவெல்லாம் செய்ய முடியுமென்பதை ஆஸ்விச் வதைமுகாம் மூலம் நாம் அறிந்திருக்கிறோம். இனி என்ன நடக்கக் காத்திருக்கிறது என்பதை ஹிரோஷிமா மூலம் நாம் அறிந்திருக்கிறோம். எனவே, நாம் எச்சரிக்கையோடு இருப்போம்."

ஆமாம், மனிதர்களாகிய நாம், மனிதர்கள் குறித்தே இன்னும் எச்சரிக்கையுடனிருக்க வேண்டியிருக்கும் கொடுமையை என்ன சொல்ல?

- ஆசிரியர்

# தெரிவுக்குழுவின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விசாரணைகளில் ஆஜராக முடியும்

## விஜயதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணைகளில் ஆஜராக முடியும் என சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேன்முறையீட்டு நீதிம்ன்றின் அழைப்பாணையை நிராகரித்துள்ளனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த கட்சி உறுப்பினர்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணைகளில் ஆஜராக வேண்டுமென கட்சியை வலியுறுத்தப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். எனினும், ஆளும் கட்சி உறுப்பினர்களின் தீர்மானத்தை கவனத்திற் கொள்ளாது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நீதிமன்ற விசாரணைகளில் ஆஜராக முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களை விசாரணை செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டையே ஐக்கிய தேசியக் கட்சி கொண்டிருப்பதாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார். எனினும், பழிவாங்கும் நோக்கில் தனிப்பட்ட நபர் ஒருவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சதித் திட்டங்களுக்கு கட்சி ஒத்துழைப்பு வழங்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இயல்பு நிலைக்குத் திரும்பும் வெள்ள அனர்த்த பிரதேசங்கள்

(கொழும்பு)

சீரற்ற காலநிலையின் காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மீண்டும் இயல்பு நிலையை நோக்கி திரும்பி வருவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. மழை, வெள்ளம் காரணமாக நாடளாவிய ரீதியில் 2,75,982 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக இடம்பெயர்ந்த 30,500 பேர் 149 முகாம்களில் தங்கவைக்கப் பட்டுள்ளனர். வெள்ளம், மண்சரிவு காரணமாக 42 பேர் உயிரிழந்துள்ளனர். 20 பேர் காயமடைந்துள்ளதோடு, 9 பேர் காணாமல் போயுள்ளனர்.

நீர்மட்டம் உயர்வடைந்த காரணத்தினால் திறந்து விடப்பட்டிருந்த பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் மீண்டும் மூடப்பட்டுள்ளதாக பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார். இதேவேளை வெள்ளத்தில் மூழ்கியிருந்த வீதிகள் நீர் வடிந்ததைத் தொடர்ந்து மீண்டும் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டுள்ளன. எனினும் நேற்று முன்தினம் இரவு முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்த அதிக மழையின் காரணமாக அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பரவிக்கிடக்கும் சிறுகற்கள் வாகனச் சாரதிகள் நெருக்கடி

(திருநெல்வேலி)

வீதிகளின் அகலிப்பு மற்றும் திருத்த வேலைகளுக்காக பல வீதிகளில் கொட்டிப்பரவப்பட்டிருக்கும் சிறிய கற்களினால் வாகன ஓட்டிகளும் நடை பயணிகளும் தினமும் பல இன்னல்களை அனுபவித்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கள் போடப்பட்டு பல நாட்களாக றோலர் மூலம் சீர் செய்யப்படாமல் இருப்பதினால் துவிச்சக்கர வண்டி மோட்டார் சைக்கிள், கார், லொறி, பேருந்து போன்ற வாகன ஓட்டிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இக்கற்களினால் வாகனங்களின் ரயர்கள், ரியூப்புக்கள் சேதமடைவதாகவும், நடைபயணிகளும் பல இடையூறுகளைச் சந்திப்பதாகவும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

வீதிகளில் பரவிக்காணப்படும் இக்கற்கள் விரைவில் சீர் செய்யப்படுவதில்லை.

பல நாட்கள் அப்படியே காணப்படுகின்றன. இது தவிர வீதிகளுக்குக் குறுக்காக பள்ளங்கள் தோண்டப்பட்டு கூரிய இரும்புக் கம்பிகள், மூலம் சீர் செய்யப்படும் பாலங்கள், மதகுகளின் வேலைகளும் மிகத்தாமதமாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

துரித கதியில் பாதுகாப்புடன் இவ் வேலைகள் முடிவடையாததினால் இப்பள்ளங்களுக்குள் விழுந்து சிலர் காயமடைந்ததுடன் உயிரிழந்துமுள்ளனர்.

வீதித் திருத்த வேலைகள், பாலங்கள், மதகுகள் புனரமைப்பும் மக்களுக்குத் தேவைப்படுபவையாக இருந்தாலும் அவை பொதுமக்களுக்கு இடைஞ்சல் தராதவையாகவும் ஆபத்துகளை ஏற்படுத்தாதவையாகவும் அமைதல் வேண்டும் என்பதால் துரித கதியில் இவ்வீதிப்புனரமைப்புக்களை மேற்கொள்வது உசிதமானதாகும். எனப் பொது மக்களினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# மாற்றுவலுவுள்ளோர் பேரவை கிளிநொச்சியில் அமைக்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் பேரவையை எதிர்வரும் ஆண்டின் ஆரம்பத்தில் உருவாக்குவதற்கான முனைப்புக்களை மாவட்டச் செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

பிரதேச ரீதியாக மாற்றுவலுவுள்ளோரை உள்ளடக்கிய சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுவலுவுள்ளோரைச் சமூக மட்டத்தில் வைத்துப் புனர்வாழ்வளிக்கும் சி.பி.ஆர்.திட்டத்தின் கீழ் அவை சிறப்பாக இயங்கி வருகின்றன. அவற்றிலுள்ள உறுப்பினர்களை இணைத்து இந்த மாவட்டப் பேரவையை இயக்குவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் இதற்கான முன்னெடுப்புக்களை அரசாங்க அதிபரின் வழிகாட்டுதலின் பேரில் முன்னெடுத்து வருகின்றது. பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்பு இதற்கென பெறப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் மருத்துவ அதிகாரிகளால் மாற்று வலுவுள்ளோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத் திட்டங்களுடன் இணைந்ததாக இவ்வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சென்ற 2010 ஆம் ஆண்டில் அரசாங்க அதிபர திருமதி ரூபவதி கேதீஸ்வரனின் முயற் சியால் உருவாக்கப்பட்ட மாவட்ட மகளிர் அபிவிருத்திப் பேரவை மிகவும் சிறப்பாக இயங்கி வருவதும் இதன் இயக்கத்திற்கு மாவட்ட சமூக சேவைகள் அலுவலகமும் மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகமும் பங்களிப்புச் செய்துவருவதும் குறிப்பிடத்தக்கது. (90)

# வாசிப்பு மாத நிகழ்வு


(கரணவாய்)


வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரமும் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தவிசாளர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முன்பள்ளி சிறார்களின் கலைநிகழ்வுகளும், வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கல் மற்றும் வாசிப்புக்கு இலத்திரனியல் ஊடகங்கள் தடையாக உள்ளனவா? இல்லையா? என்னும் விடயத்தில் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது. (18)

வே.அர்ச்சுனன்

**விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பலகாரணங்கள் இருக்கின்றபோதிலும் விடுதலைப் புலிகளின் பிழைகள் தொடர்பில் விமர்சனம் செய்கின்ற போக்கை தமிழ் ஊடகங்கள் கையாளத் தவறியமையே விடுதலைப் புலிகளின் அழிவிற்கு உறுதியான வழிகோலியது. ஒட்டு மொத்தத்தில் தமிழ் ஊடகங்கள் விடுதலைப் புலிகளை உசுப்பேத்தியும், அவர்களது தவறுகளை மறைத்தும் அவர்களை அழிவுக்கு கொண்டுபோன செயற்பாட்டில் ஒருமித்தே முன்னணியில் திகழ்ந்தன.**





# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

# 15

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைசார்ந்த செயற்பாடுகள் முன்னணியில் உள்ளதா அல்லது கடற்புலிகளின் அரசியல் துறைசார்ந்த செயற்பாடுகள் முன்னணியில் உள்ளதா? என்ற ஒரு போட்டி யாழ். மாவட்டத்தில் மட்டுமல்லாது விடுதலைப் புலிகளின் ஆளுகையின் கீழ் இருந்த அனைத்துப் பகுதிகளிலும் இருந்தது. யாழ். மாவட்டத்தில் இந்தப் போட்டி கூடுதலாக நிலவிவந்தது. யாழ்ப்பாணத்தில் கரையோரப் பகுதிகளில் நடந்த சம்பவங்கள் அல்லது விடுதலைப்புலிகள் சார்ந்த செய்திகள் முன்னணியில் அல்லது முந்திக்கொண்டு ஊடகங்களில் வெளிவந்தமை அரசியல் துறையினரை எரிச்சலடையச் செய்தது.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் நடந்த அல்லது நடக்கின்ற சம்பவங்கள் ஐ.பி.சி வானொலியில் அதிகாலை வேளையில் முக்கியத்துவம் மிக்க செய்திகளாக வெளிவந்தமை யாழ். மாவட்ட அரசியல் துறையினரிடையே எரிச்சலை ஏற்படுத்தியது. இதன் விளைவாக ஏற்கனவே யாழ் மாவட்ட ஐ.பி.சி செய்தியாளருக்கும் கடற்புலிகளின் தளபதி சூசைக்கும் இடையே இருந்த நெருக்கத்தின் விளைவாக இச்செய்திகள் கூடுதலாக மிகைப்படுத்தப்பட்டு வருகின்றன என்ற ஒரு முறைப்பாடு யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதியால் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனிடம் முன்வைக்கப்படுகிறது.

இந்த யோசனையை செவிமடுத்த தமிழ்ச்செல்வன் ஐ.பி.சி முழுமையாக கஸ்ரோவின் கட்டுப்பாட்டில் இருப்பதால் இவ்விடயத்தில் தான் கூடுதல் செல்வாக்கு செலுத்த முடியா தெனவும் நீங்கள் கஸ்ரோவின் ஆட்களைப் பிடித்து அதற்குரிய ஒழுங்குகளை செய்யுங்கள் ஆனால் ஊடகவியலாளர்கள் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் அவதானமாக இவ்விடயத்தை கையாளுங்கள் என்ற உத்தரவு இளம்பரிதிக்கு பிறப்பிக்கப்பட்டதுடன் உங்களது நடவடிக்கைகள் காரணமாக சூசையிடமிருந்தோ அல்லது ஐ.பி.சி யாழ்ப்பாணச் செய்தியாளரிடமிருந்தோ எனக்கொரு முறைப்பாடும் வரக்கூடாது எனவும் அறிவுறுத்தியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து எப்படியாவது கடற்புலிகளின் அரசியல் துறைக்குப் போட்டியாக ஒரு செய்தியாளரை களமிறக்க வேண்டும் என்று முடிவுகட்டிய இளம்பரிதி, ஆனந்தசங்கரியுடன் நெருக்கமாக இருந்த அந்த கிராம அலுவலராகிய ஊடகவியலாளரை தனது வலைக்குள் வீழ்த்தி தங்களது அரசியல் துறையால் முன்னெடுக்கப்படுகின்ற சிறிய நிகழ்வுகள் உட்பட அனைத்து நிகழ்வுகளையும் காலை வேளையில் குறித்த ஐ.பி.சி வானொலியில் ஒலிபரப்புவதற்குரிய ஏற்பாட்டினை இளம்பரிதி செய்து முடித்தார்.

முன்னர் நந்தவனத்தில் கடமையாற்றிய விடுதலைப் புலிகளின் சர்வதேச பிரிவின் தவச்செல்வன் என்றபோராளியே குறித்த வலிகாமம் செய்தியாளரின் நியமனத்திற்குரிய ஒழுங்குகளை செய்துகொடுத்தார். இவர் ஏற்கனவே இத்தாலி நாட்டில் விடுதலைப் புலிகளின் சர்வதேச கிளை ஒன்றின் பொறுப்பாள்ராக இருந்து செயற்பட்ட பொழுது அங்கு அந்த அலுவலகத்தில் கடமையாற்றிய யுவதி ஒருவருடன் வழமைக்கு மீறிய தொடர்புகளை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு கஸ்ரோவால் உடனடியாக கிளிநொச்சிக்கு அழைக்கப்பட்டிருந்தார். கிளிநொச்சிக்கு அழைக்கப்பட்ட தவச்செல்வன் என்ற குறித்த போராளி நந்தவனத்தில் இருந்தவாறு வெளிநாடுகளில் இருந்து வன்னிப்பகுதி மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு வருகின்ற மக்களை விசாரணைசெய்து அவர்களது செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பும் இவரைச் சார்ந்ததாக இருந்தது. அத்துடன் வெளிநாடுகளில் இருந்து வருகின்ற தமிழ் மக்களிடம் பணம் கறக்கும் கதாநாயகனாக இவர் நந்தவனத்தில் வலம் 'வந்துகொண்டிருந்தார்.

குறித்த தவச்செல்வன் என்ற போராளிக்கு கடற்புலிகள் அணியினரை கண்ணிலும் காட்டக்கூடாது. இதனை ஒரு தகுந்த சந்தர்ப்பமாக பயன்படுத்திய அவர், தனது பெயரைக் கொண்டிருந்த மற்றொரு ஊடகவியலாளரான யாழ்.மாவட்ட ஐ.பி.சி. செய்தியாளராக இருந்த தவச்செல்வன் என்பவரை ஓரங்கட்டும் நோக்குடனேயே குறித்த வலிகாமம் செய்தியாளரை ஐ.பி.சி.க்கு நியமித்தார்.

எவ்வாறிருந்த போதிலும், புலிகளிற்கு பணியாற்றிய அல்லது புலிகளின் ஊடகங்களில் பணியாற்றிய அனைத்து செய்தியாளர்களும் மிகவும் மிகைப்படுத்தப்பட்ட செய்திகளையே தங்களது ஊடகங்களில் வெளிப்படுத்தி வந்தனர். சூசைக்கும், தவச்செல்வன் என்ற அந்த ஊடகவியலாளரிற்கும் இருந்த நெருக்கம் காரணமாக கடற்புலிகள் சார்ந்த செய்திகளை மிகைப்படுத்தி வெளியிட்டுவந்தமையால் சூசைக்கு இவரது நடவடிக்கைகள் பாராட்டுக்கு உரியனவாக இருந்த போதிலும், ஏனைய அரசியல்துறையினர் இவர்மீது கடுப்புடனேயே காணப்பட்டனர். இதன் விளைவாக இந்த ஊடகவியலாளர் படையினருடன் கூடுதலான தொடர்புகளை வைத்திருப்பதாக கூறி அரசியல் துறையினர் ஒருகட்டத்தில் இவரது ஊடகச் செயற்பாடுகளை முழுமையாக நிறுத்தி வைத்திருந்தனர். ஆனால், புலனாய்வுத் துறையினர் மற்றும் கடற்புலிகளின் விசேடதளபதி போன்றோர் இவ்விடயத்தில் உடனடியாக தலையிட்டு, அரசியல் துறையினரிடம், குறித்த ஊடகவியலாளரை தாங்கள் கையாள்வதால் அவரது விடயத்தில் நீங்கள் தலையிடக்கூடாது என்று வலியுறுத்திச் சொல்லப்பட்டது.

இவ்வாறு புலிகளுக்குள் இருந்த போட்டிகள் ஒருபுறம் இருக்க, புலிகளிற்காக செயற்பட்ட ஊடகவியலாளர்களின் மிதமிஞ்சிய செயற்பாடுகள் இன்னொருபுறத்தில் வேகமாக இடம்பெற்று வந்தது. குறித்த தமிழ் ஊடகவியலாளர்கள் தங்களுக்குத் தாங்களே புலி முத்திரை குத்தியவாறு தங்களது செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர். இதைவிட விடுதலைப் புலிகளின் மேல்மட்டத்தில் சாதிய ரீதியான ஒரு தோற்றப்பாடும் இறுதிநாட்களில் வலம்வரத் தொடங்கியிருந்தது. இவர்களது சாதிய ரீதியிலான பாகுபாட்டினை ஊடகங்கள் கணக்கில் எடுக்கத் தவறியிருந்தன அல்லது தெரிந்தே மறைத்து வந்தன.

குறிப்பாக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த இளம்பரிதி கடுமையான ஒரு சாதியவாதியாக இருந்தார். ஆனால் தமிழ்ச்செல்வனிற்கு பயந்து இதை வெளியில் காட்ட தயங்கிவந்தார். இந்த அரசியல் துறைப் போராளியான இளம்பரிதியின் தந்தையாருடைய ஏற்பாட்டில் காளைமாடு அடக்கும் போட்டி 1960ஆம் ஆண்டு தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்றுவந்தது. இதன்போது இளம்பரிதியின் தந்தைகாளை அடக்கும் நிகழ்வில் வெற்றிபெற்றவர்களுக்கு மாலை அணிவிக்க வந்திருந்தார். சலவைத் தொழில் செய்கின்ற ஒரு தொழிலாளி அந்தப் போட்டியில் முதலாவது இடத்தை பெற்றிருந்தார். அந்த வெற்றியாளரை மேடைக்கு அழைத்து நிறுத்தி வைத்துவிட்டு மேடையில் அவருக்கு மாலையைப் போடாமல் அவர் கொண்டுவந்திருந்த காளைமாட்டிற்கு மாலையைப் போட்டு தனது சாதியத் திமிரை இளம்பரிதியின் தந்தை வெளிப்படுத்தியிருந்தார். அந்நாட்களில் இது சாதாரண மக்கள் மத்தியில் கண்டன உணர்வலைகளைத் தோற்றுவித்திருந்தது.

இவரின் மகனான இளம்பரிதியே பின்னைய நாட்களில் யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் என்ற பதவியை எடுத்து மக்களை சமமாக வழிநடத்துகின்றோம், மக்களுக்காக உழைக்கின்றோம் என்று முழங்கி வந்தார். இவர்களது முன்னைய செயற்பாடுகளும் பின்னைய செயற்பாடுகளும் ஒரேமாதிரியானதாக இருந்த போதிலும், இதனை ஊடகங்கள் எதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பலகாரணங்கள் இருக்கின்றபோதிலும், விடுதலைப் புலிகளின் பிழைகள் தொடர்பில் விமர்சனம் செய்கின்ற போக்கை தமிழ் ஊடகங்கள் கையாளத் தவறியமையே விடுதலைப் புலிகளின் அழிவிற்கு உறுதியான வழிகோலியது.

ஒட்டுமொத்தத்தில் தமிழ் ஊடகங்கள் விடுதலைப் புலிகளை உசுப்பேத்தியும், அவர்களது தவறுகளை மறைத்தும் அவர்களை அழிவுக்கு கொண்டுபோன செயற்பாட்டில் ஒருமித்தே முன்னணியில் திகழ்ந்தன. இறுதிநாட்களில் வன்னியில் செயற்பட்ட ஊடகவியலாளர்களும் விடுதலைப் புலிகளை அழிப்பதில் முனைப்புடன் செயற்பட்டனர். யார் அந்த ஊடகவியலாளர்கள் இவர்களும் யாழ்ப்பாண ஊடகவியலாளர்களும் எவ்வாறு ஒருமித்து செயற்பட்டனர்? தொடர்ந்துபார்ப்போம்.

(தொடரும்)

# மக்களின் கடன் சுமை; 25 வீதத்தால் அதிகரிப்பு

## - மத்திய வங்கி தகவல்

(கொழும்பு)

இலங்கையில் தனிநபர் ஒருவருக்கான கடன் சுமை 25 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் காட்டுக்கின்றன. கடந்த வருடம் இந்தத் தொகை 245, 980 ரூபாய்களாக இருந்தன. எனினும் தற்போது அது 308, 171 ரூபாய்களாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தனிநபர் கடன் என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின் செலுத்த வேண்டிய கடன்தொகையை மொத்த சனத்தொகையால் வகுத்த நிலையிலேயே இந்த தொகை கணிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் சனத்தொகை 2012 ஆம் ஆண்டில் 20, 277, 597 ஆகும். இந்தநிலையில், இலங்கை அரசாங்கத்தின் செலுத்த வேண்டிய கடன் தொகை 5133 பில்லியன் டொலர்களாகும்.

இது கடந்த 8 மாதகாலப் பகுதிக்குள் 1, 115.6 பில்லியன் தொகையில் இருந்து 6, 248.9 பில்லியன்களாக அதிகரித்துள்ளது. இதில் உள்நாட்டுக் கடன் 449 பில்லியன்களால் 16 வீதம் அதிகரித்து, 3, 253 பில்லியன்களாக உயர்ந்துள்ளது.

வெளிநாட்டுக்கடன்கள் 666.5 பில்லியன்களில் இருந்து 28.6 வீதமாக அதிகரித்து, 2, 995.8 பில்லியன்களாக அதிகரித்துள்ளன. பொருளியல் நிபுணர்களின் கருத்துப்படி, நாட்டின் ஏற்றுமதி வருமானம், கடந்த 9 மாதங்களில் 8.3 வீதத்தினால் அதிகரித்த போது இறக்குமதி செலவுகள் 11.2 வீதத்தினால் அதிகரித்தன. இதன்காரணமாகவே இலங்கையின் அரசாங்கத்தின் கடன் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

# புனர்வாழ்வு பெற்ற 313 பேர் தைப்பொங்கல் தினத்தில் விடுதலை

புனர்வாழ்வு பெற்று வரும் 313 முன்னாள் புலி உறுப்பினர்கள் தைப்பொங்கலை முன்னிட்டு ஜனவரி 13 ஆம் திகதி விடுவிக்கப்படவிருப்பதாக புனர்வாழ்வுக்கு பொறுப்பான ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு வருட கால புனர்வாழ்வு பயிற்சியை முடித்துக் கொண்ட மேற்படி 313 ஆண்களே தமது குடும்பத்தாருடன் சேர்த்து வைக்கப்படவுள்ளனர்.

இதன்படி, மருதமடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து 220 பேரும் சேனபுர புனர்வாழ்வு நிலையத்திலிருந்து 23 பேரும் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து 70 பேருமாக 313 முன்னாள் புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள தைப்பொங்கலை முன்னிட்டு இவர்கள் ஜனவரி 13 ஆம் திகதியன்று வவுனியா கலாசார மண்டபத்தில் வைபவரீதியாக குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

# கல்வி அமைச்சர் பந்துல உடன் பதவி விலகவேண்டும்

## - இலங்கை ஆசிரியர் சங்கம்



(கொழும்பு)

பரீட்சைகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு பொறுப்பின்றி நடந்து கொள்ளும் கல்வி அமைச்சர் உடன் பதவி விலக வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது. நடந்து முடிந்த கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் விஞ்ஞான பாடத்தில் பகுதி ஒன்றில் 19 வினாக்கள் முன்னர் வெளியானமை தொடர்பில் அமைச்சர் நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டார்.

இதனை தொடர்ந்தே ஆசிரியர் சங்கம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தமது கருத்தை இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மகிந்த ஜனசிங்க இவ்வாறு தெரித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலினும் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை கல்வியமைச்சர் பந்துல குணவர்தன கல்வியமைச்சர் பதவியிலிருந்து உடனடியாக இராஜினாமா செய்யவேண்டும் என்று அகில இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரணத்தரப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியானமை நாட்டின் கல்வியை இருட்டுக்குள் தள்ளிவிடுகின்ற செயற்பாடாகும்.

இதற்கு நாட்டின் கல்வியமைச்சர் முழுமையாக பொறுப்புக் கூறவேண்டும். கல்விச் செயற்பாடுகளுக்கும் பரீட்சை முறைமைகளுக்கும் கல்வியமைச்சர் என்ற வகையில் அவரே பொறுப்பு கூறவேண்டும். எனினும் பரீட்சை வினாத்தாள்கள் வெளியானமை இது முதல் தடவையல்ல எனக்கூறி கல்வியமைச்சர் தப்பித்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றார்.



நாட்டின் கல்வித்துறையை இருட்டுக்குள் தள்ளிவிடுவதற்கு முயற்சிக்கும் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன கல்வியமைச்சர் பதவியிலிருந்து உடனடியான இராஜினாமா செய்ய வேண்டும் என்று அச்சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்குள் சர்வதேசம் தலையீடு செய்யும் அபாயம்



(கொழும்பு)


சர்வதேசம் நாட்டிற்குள் தலையீடு செய்யக் கூடிய பின்னணியை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் நீதிமன்ற விவகாரங்களில் தேவையின்றி தலையீடு செய்வதாக ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகம் இலங்கை தொடர்பில் விசாரணை நடாத்த, நடவடிக்கை எடுக்க அரசாங்கமே வழியமைத்துக் கொடுக்கின்றது. நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை வழங்கவில்லை.

நாடாளுமன்ற உறப்பினர்களை விலைகொடுத்து வாங்கி இந்த பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொண்டது. மக்களினால் வழங்கப்படாத மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை அரசாங்கம் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

# வெளிநாடுகளில் பணிபுரியும் பணிப்பெண்களுக்கு விசேட திட்டம்



(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை பணிப்பெண்களின் நலன்புரி செயற்திட்டங்களை மேம்படுத்த அடுத்த வருடத்தில் இருந்து விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், தற்போது வெளிநாட்டு தூதுவராலயங்களுடன் இணைந்து சிறந்த நலன்புரித் திட்டங்களை நடைமுறைப்ப டுத்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

எவ்வாறாயினும் மத்திய கிழக்கு நாடுகள், இலங்கை பணிப்பெண்களை கவனிக்கும் செயற்பாடுகளில் பின்னிப்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதாகவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது. இந்தநிலையிலேயே, வெளிநாடுகளில் உள்ள இலங்கை பணிப்பெண்களின் சேம நலன்களை மேம்படுத்துவதற்கு பணியகம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

# உண்மையான அபிவிருத்தி எது?

பாதை அபிவிருத்தி மாத்திரம் நாட்டின் அபிவிருத்தியாகக கருதமுடியாது என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். பேருவளை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மனித அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டியதே தற்போதுள்ள தேவையாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கொழும்பு - யாழ்.அதிவேகப்பாதை முதல்கட்ட பணிகள் விரைவில்

கொழும்பு - யாழ்ப்பாணத்திற்கான அதிவேகப் பாதையின் முதல் கட்ட அமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. இதற்கான அனுமதியை இலங்கையின் அமைச்சரவை வழங்கியுள்ளது. கொழும்பில் இருந்து குருநாகல் ஊடாக யாழ்ப்பாணத்துக்கான இந்த அதிவேகப்பாதை 300 கிலோமீற்றர்களை தூரமாக கொண்டிருக்கும்.

இந்த பாதை முதல் கட்ட அமைப்புக்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கிடப்படவுள்ளன.இதன்படி, முதல் கட்டப்பணியின் போது 4 ஓடு வழிகளைக் கொண்ட 42 கிலோமீற்றர் பாதை எந்தரமுல்ல முதல் மீரிகம வரைக்கும் அமைக்கப்படவுள்ளது.

# சீரற்ற காலநிலை காரணமாக பாதைகளுக்கு சேதம் 10 கோடி



சீரற்ற காலநிலையினால் பிரதான பாதைகளுக்கு ஏற்பட்ட சேதம் 10 கோடி ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.நாட்டின் பல பிரதான பாதைகள் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் நிர்மல கொதலாவல தெரிவித்துள்ளார்.

வடமத்திய, மத்திய, வடமேல், தென், ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் இவ்வாறு முக்கிய வீதிகள் மற்றும் பெருந்தெருக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பல பாலங்கள் சேதமடைந்துள்ளன.

சில பாதைகள் போக்குவரத்தில் ஈடுபட முடியாத அளவிற்கு சேதமடைந்துள்ளன.சேதமடைந்த பாதைகள் மற்றும் வீதிகளை விரைவில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்


# மலவாயில் மூலமான தங்கம் கடத்தல் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு சட்டவிரோதமாக தங்கம் கடத்திச் செல்ல முயன்ற நபர் ஒருவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் நண்பகல் கைது செய்யப்பட்டுள்ளார். சென்னையைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யபட்ட குறித்த நபரிடமிருந்து ரூ 20 இலட்சம் பெறுமதியான 3 தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இவற்றின் மொத்த நிறை 300 கிராம்களாகும். மலவாயிலில் மறைத்து வைத்தே இவர் தங்கத்தை கடத்த முயன்றுள்ளார்.

நேற்று நண்பகல் 2 மணிக்கு சென்னைக்குச் செல்லவிருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் பயணிக்க வந்த போதே குறித்த நபர் கைது



செய்யப்பட்டுள்ளார். அண்மைக் காலமாக மலவாயிலில் மறைத்து வைத்து தங்கம் கடத்தும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில்

## தீவகத்தில் பாரிய அபிவிருத்தி



(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலின் கீழ் தீவகத்தின் அபிவிருத்தி பாரிய முன்னேற்றம் கண்டு வருகின்றது என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

வேலணை மற்றும் ஊர்காவற்துறை பிரதேச சபைக்கூடாக 2013 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் தலைமையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குடாநாட்டிலுள்ள ஏனைய பிரதேச சபைகளை விட ஈ.பி.டி.பி கட்சியின் ஆளுகைக்குட்பட்ட நெடுந்தீவு, ஊர்காவற்துறை, வேலணை ஆகிய பிரதேசசபைக்களுக்கூடாக பல்வேறு செயற்திட்டங்கள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு அமைச்சர் சிறந்த வழிகாட்டலையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார். இவ்வாறான அபிவிருத்தி செயற்திட்டங்கள் மூலம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தீவகம் முழுமையான அபிவிருத்தி நோக்கி முன்னேற்றம் அடையும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

அமைச்சரின் முயற்சியின் காரணமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் விசேட பணிப்பின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக தீவகத்தின் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்துறை அபிவிருத்திக்கென தலா 100 மில்லியன் வீதம் 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்விசேட நிதியூடாக தீவகத்தில் வீதிகள், தொழிற் பயிற்சிகள், நவீனவசதிகளுடன் முன்பள்ளிகள், துறைமுகங்கள், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட பல்வேறு வசதிவாய்ப்புக்கள் முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் ஊர்காவற்துறை பிரதேச இணைப்பாளரும், ஊர்காவற்துறை பிரதேச சபைத் தவிசாளருமான ஜெயகாந்தன், ஈ.பி.டி.பியின் வேலணை பிரதேச இணைப்பாளரும், வேலணை பிரதேச சபைத் தவிசாளருமான சி.சிவராசா (போல்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பௌர்ணமி உற்சவம்

சாவகச்சேரி கல்வயல் அருள்மிகு பூரணா புட்கலா சமேத ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய மாதாந்த பௌர்ணமி உற்சவம் நாளை இடம்பெறவுள்ளது.

நாளை மாலை ஐயப்பனுக்கு விசேட திரவிய அபிசேகம் நடைபெற்று பூசை வழிபாடுகளுடன் 18 ஆம் படிப் பூசையும் இடம்பெறவுள்ளது. வசந்தமண்டப பூசையுடன் எம்பெருமானுக்கு உள்வீதியுலாவும் இடம்பெறவுள்ளது. (இ)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

**உறுப்புரை - 23**

1. ஒவ்வொருவரும் தொழில் செய்வதற்கும், அத்தொழிலினைச் சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும் செய்யுந் தொழிலில் நியாயமானதும் அனுகூலமுடையதுமான தொழில் நிபந்தனைகளுக்கு உரியோராயிருப்பதற்கும், தொழிலின்மைக்கெதிரான பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமை உடையவர் ஆவார்.
2. ஒவ்வொருவரும் வேறுபாடெதுவுமின்றி தொழிலுக்கும் சமமான சம்பளம் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.
3. வேலைசெய்யும் ஒவ்வொருவரும் தாமும் தமது குடும்பத்தினரும் மனித மதிப்புக்கியைபான ஒரு வாழ்க்கை நடத்துவதனை உறுதிப்படுத்தும் நீதியானதும், அனுகூலமானதுமான ஊதியத்துக்கு உரிமையுடையோராவர். அவசியமாயின் இவ்வூதியம் பிற சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளினால் குறை நிரப்பப்படுதாயிருத்தல் வேண்டும்.

## சுனாமிப் பேரலை நினைவுப் பிரார்த்தனை

முல்லைத்தீவில் சுனாமியால் காவு கொள்ளப்பட்டோரின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு கடற்கரை வீதியில் அமைந்துள்ள சுனாமி நினைவகத்தல் இந்த அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இந்த நினைவாலயத்தில் 1329 பேரின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது. காலை 7 மணிக்கு இந்துமத வழிபாடும், 8.30 மணிக்கு இஸ்லாம் மத வழிபாடும், 8.40 இற்கு கிறிஸ்தவ மததிருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் வேதநாயகன், இந்து, இஸ்லாம் கிறிஸ்தவ மதகுருமார் மற்றும் பொது மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (04)




புதிதாக கட்டப்பட்டு அனைத்துப் பணிகளும் பூர்த்தியடைந்த நிலையில் திறப்பதற்குத் தயாராக இருக்கும் கைதடி சமுர்த்தி வங்கி கட்டடம்.



# நன்றி சொல்ல உங்களுக்கு வார்த்தை இல்லை எனக்கு



குடும்பத்துடன் உற்சாகமாக சுற்றுலாவிற்குச் சென்றுள்ள சச்சின், தனது இரசிகர்களுக்கு டுவிட்டரில் நன்றி தெரிவித்துள்ளார். ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வுபெற்ற நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் தனது மனைவி அஞ்சலி, மகள் சாரா, மகன் அர்ஜூனுடன் சேர்ந்து உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள சுற்றுலாத்தலமான முசோரிக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த சச்சின்,

கடந்த பல ஆண்டுகளாக என் மீது அன்பும், ஆதரவும் அளித்த இரசிகர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நன்றியை சொல்ல வார்த்தைகள் போதாதது. உங்களுடைய கருத்துகள் எனது மனதுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், கண்களில் கண்ணீரையும் வரவழைத்துள்ளது. ஒருநாள் போட்டிகளில் எனது சிறந்த தருணங்கள் வாழ்நாள் முழுவதும் என்னுடன் இருக்கும் எனத் தெரிவிததார்.

# சச்சின் ஓய்வு வெளிவந்த கருத்துக்கள்

சச்சின் ஓய்வு குறித்து பாகிஸ்தானின் அக்தர், டோனி, கபில்தேவ், அக்ரம், வக்கார் யூனிஸ், இன்ஸமாம் உல்ஹக் ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர். அதன் விபரம் வருமாறு:

**கபில்தேவ்:** ஜாம்பவான்கள் நூற்றாண்டில் ஒரு முறை தான் மண்ணில் பிறப்பர். சச்சினுக்கு நன்றி செலுத்த, கடைசி போட்டியில் பங்கேற்க வாய்ப்பு கொடுத்திருக்க வேண்டும்.உலகில் உள்ள இரசிகர்கள் கடைசியாக அவரை களத்தில் பார்க்க ஆவலாக இருந்திருப்பர்.

டெஸ்டில் இன்னும் விடை பெறவில்லை என்றாலும், இந்தியா அணியின் நீல நிற சீருடையில் அவரை இனி பார்க்க முடியாமல் போனது ஏமாற்றம் தான். இதனால் வருத்தமாக உள்ளது என்றார்.

**அக்தர்:** மிகப்பெரிய அளவில் விடைபெற சச்சினுக்கு தகுதி உள்ளது. பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில் தொடங்கிய அவரது கிரிக்கெட் வாழ்க்கை, தற்போதும் இடம்பெறும் பாகிஸ்தான் தொடருக்குப் பின் நிறைவு பெற்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும். சச்சினின் முடிவு மிகவும் அதிர்ச்சியாக உள்ளது என்றார்.

**டோனி :** போட்டியின் வெற்றி மற்றும் தோல்வியை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்பது குறித்தும் அவரிடம் இருந்து அறிந்து கொண்டேன். அனைத்து வழிகளிலும் ஒவ்வொரு வீரரையும் சச்சின் டெண்டுல்கர் வழிநடத்தினார் என்றார்.

**அக்ரம்:** நவீன கிரிக்கெட்டின் மிகப்பெரிய துடுப்பாட்ட வீரர் சச்சின். இவரைப்போன்ற ஒருவீரரை உடனடியாக உருவாக்குவது கடினம். அவருடன் விளையாடியது பாக்கியம்.

உயர்மட்ட கிரிக்கெட்டில் இவ்வளவு நீண்ட காலம் உடற்தகுதியுடன் தரத்தையும் விட்டுக் கொடுக்காமல் பரமாரித்து வந்ததற்காக நான் அவரை பாராட்டுகிறேன். கிரிக்கெட்டில் உத்தி ரீதியாக துல்லியமான ஒரு துடுப்பாட்ட வீரரை இனி காண்பது கடினம் என்றார்.

**வகார் யூனிஸ்:** எங்களுக்கு எதிராக விளையாடிய அவரது முதல் டெஸ்டிலிருந்தே நாங்கள் அவரை அறிவோம். அவர் தனிச்சிறப்பு வாய்ந்தவர் என்பது எங்களுக்கு அப்போதே தெரியும், 16 வயதில் உலகின் சிறந்த வேகப்பந்து வீச்சை திறமையுடன் எதிர்கொண்டவர் சச்சின். அந்தத்தொடரிலேயே நாங்கள் உணர்ந்தோம், ஒரு மிகப்பெரிய வீரர் உருவாகிவருகிறார் என்று. அவர் மிகவும் தைரியமானவர் என்பது அப்போதே எங்களுக்குப் புலப்பட்ட ஒரு விடயம் என்றார்.

**இன்ஸமாம் உல் ஹக்:** இந்திய அணி சச்சினை நம்பியே இருந்தது. ஆனாலும் அவர் இந்த நெருக்கடியையும் அழுத்தத்தையும் திறம்பட கடந்து பல சாதனைகளை ஏற்படுத்தியுள்ளார். இவரது சாதனைகள் முறியடிக்கப்பட முடியாதது.

அவர் ஒரு மென்மையான மனிதர். பல கோடி இரசிகர்கள் அவரை ஒரு மிகப் பெரிய வழிபாட்டுப் பொருளாக பார்க்கும் போது அவரது நடத்தை அளப்பறிய பெருமை மிக்கதாகும். நிச்சயம் இளம் வீரர்களுக்கு அவர் ஒரு ரோல் மாடல்தான் என்றார்.

# இங்கிலாந்து அணி அறிவிப்பு

(லண்டன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் மற்றும் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடருக்கான் இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணி 3 ருவென்ரி-20, 3 ஒருநாள் போட்டி மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளிலும் பங்குபெறவுள்ளது.

இதில் ருவென்ரி-20 போட்டிகள் பெப்ரவரி 9ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில் டெஸ்ட் போட்டிகள் மார்ச் 6ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன.

ருவென்ரி-20, ஒரு நாள் போட்டிக்கான அணிகளே தற்போது அறிவிக்கப் பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அணி விபரம் வருமாறு:

ருவென்ரி-20 :

ஸ்ருவேர்ட் புரொட், ஜோனி பெயர்ஸ்ரோ, ரிம் பிரஸ்னன், டனி பிறிக்ஸ், ஜொஸ் பட்லர், ஜேட் டேர்ண்பக், ஸ்டீவன் பின், அலெக்ஸ் ஹேல்ஸ், மைக்கல் லம்ப், ஸ்ருவேர்ட் மீக்கர், மோர்கன், சமித் பட்டேல், ஜேம்ஸ் ட்ரெட்வெல், லூக் ரைட்.

ஒரு நாள்:

அலஸ்ரெயர் குக், ஜேம்ஸ் அன்டர்சன், ஜொனி பெயர்ஸ்ரோ, இயன் பெல், ரிம் பிரஸ்னன், ஸ்ருவேர்ட் புரொட், ஜொஸ் பட்லர், ஸ்டீவன் பின், கிரெய்க் கீஸ்வெட்டர், மோர்கன், சமித் பட்டேல், கிரேம் ஸ்வான், ஜேம்ஸ்ட் ட்ரெட்வெல், ஜொனதன் ட்ரொட்.

# ஈராக் அணிக்கு மரடோனா பயிற்சியாளர்?

ஈராக் அணிக்கு ஆர்ஜென்ரீன கால்பந்து ஜாம்பவான் மரடோனா பயிற்சியாளராக நியமிக்கப்படுவார் எனத் தெரிகிறது. ஆர்ஜென்ரீனா அணியின் நட்சத்திர கால்பந்து வீரர் மரடோனா. கடந்த 2010இல் தென்னாரிக்காவில் நடந்த உலக கோப்பை கால்பந்து தொடரில், ஆர்ஜென்ரீனா அணியின் பயிற்சியாளராக இருந்தார். காலிறுதியில் அணி தோற்றதால், பதவியில் இருந்து விலகினார்.

பின், டுபாய் கிளப் அணியில் பயிற்சியாளராக இருந்தார். ஒரு ஆண்டு ஒப்பந்தம் மீதமுள்ள நிலையில், கடந்த ஜூலையில் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார். இதனிடையே, ஈராக் அணியின் பயிற்சியாளராக நியமிக்க, பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதுகுறித்து வேர்ல்ட் லெவன் நிறுவத்தின் பொதுமுகாமையாளர் ஆர்ஜென்ரீனாவின் ஹெர்னன் டொபோனி கூறுகையில், ஆர்ஜென்ரீனாவில் இருந்து பயிற்சியாளர் ஒருவரை நியமிக்க ஈராக் முயற்சிக்கிறது. இதற்கு மரடோனா பெயர் பரிசீலிக்கப்பட்டது. விரைவில் மாரடோனா ஒப்பந்தம் செய்யப்படுவார் என்றார்.



# பாகிஸ்தான் செல்ல பங்களாதேஷ் சம்மதம்

(டாக்கா)

இலங்கை வீரர்கள் மீதான தாக்குதலுக்குப் பின், பங்களாதேஷ் அணி முதன் முறையாக பாகிஸ்தான் செல்ல சம்மதம் தெரிவித்துள்ளது.

கடந்த 2009, மார்ச் 3இல் பாகிஸ்தான் சென்ற இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது பயங்கரவாத தாக்குதல் நடந்தது.

இதன் பின் பாதுகாப்பு காரணங்களுக்காக, எந்த ஒரு அணியும் பாகிஸ்தான் செல்லவில்லை.

கடந்த ஏப்ரலில் பாகிஸ்தான் செல்ல இருந்த பங்களாதேஷ் அணிக்கு, டாக்கா நீதிமன்றம் தடைவிதித்தது. இப்போது, வரும் புத்தாண்டில் பங்களாதேஷ் அணி பாகிஸ்தான் செல்லவுள்ளது. இதுகுறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் (பி.சி.பி.) தலைமை அதிகாரி இனாயெட் ஹுசைன் கூறுகையில், பி.சி.பி. முன்னாள் தலைவர் முஸ்தபா கமால் ஏற்பாட்டின் படி, பாகிஸ்தான் தொடருக்கு சம்மதித்துள்ளோம். இருப்பினும், பாதுகாப்பு ஆய்வுக்குப் பின் தான் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றார்.

# எங்களுக்கும் வேண்டும் அதிக டெஸ்ட்



(மெல்போர்ன்)

இலங்கை அணி அதிக டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும். அதற்கான வழி வகைகள் உரிய வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் தொடரை முடித்துக் கொண்ட பின்னர் அடுத்தாண்டு பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகளுக்கெதிராக தலா 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. அதன் பின்னர் டிசெம்பர் மாதத்திலேயே முதல் 8 இடங்களுக்குள் உள்ள டெஸ்ட் அணிகளில் ஒன்றான பாகிஸ்தான் அணியுடன் டெஸ்ட் தொடரொன்றில் பங்குபற்றவுள்ளது.

அடுத்த வருடத்தில் இலங்கை அணி பங்குபற்றவிருந்த 5 டெஸ்ட் போட்டிகள் இலங்கைக் கிரிக்கெட் சபையால் நிறுத்தப்பட்டதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள குமார் சங்கக்கார, ஒவ்வொரு நாடும் ஒரு வருடத்தில் 10 தொடக்கம் 12 வரையிலான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும். அதை உறுதிப்படுத்துவதை அனைவரும் உறுதியாக இணைந்து செயற்பட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

டெஸ்ட் போட்டிகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். டெஸ்ட் போட்டிகளில் அதிகமாக விளையாட வேண்டும். டெஸ்ட் போட்டிகளை ஒரு மனிதனை முழுமை பெறச் செய்கின்றது. அந்த வகையில் அடுத்த ஆண்டு குறைந்தளவு டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவதையிட்டு வருத்தமடைகின்றேன். எதிர்வரும் காலங்களில் இதனை சீர்படுத்தும் வகையில் போட்டி அட்டவணை தயாரிக்கப்படவேண்டும். இதற்கு இலங்கை கிரிக்கெட் சபை முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். இல்லையெனில் டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாட்டும் வீரர்கள் சோர்வடைந்து விடும் நிலை தோன்றும். இலங்கையில் டெஸ்ட் வீரர்களை உருவாவதை இல்லாமல் செய்துவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தலைமை ஏற்கத் தயார்



(மெல்போர்ன்)

இலங்கை அணிக்குத் தலைமை தாங்க நான் தயாராகவே உள்ளேன் என சகலதுறை வீரர் மத்தியூஸ் தெரிவித்தார். அவுஸ்ரேலிய தொடரின் முடிவில் எனக்கு அணித்தலைமை பதவி வழங்கப்பட்டால், அப்பதவியை நான் ஏற்பேன். அணித் தலைமையை ஏற்க நான் தயாராக உள்ளேன்.

மஹேல ஜெயவர்த்தன இதுவரை காலமும் அற்புதமான பணியை மேற்கொண்டுள்ளார். ஆகவே அவரின் பின்னர் அணித்தலைமைப் பதவியைப் பெற்றுக் கொள்வது புதிய வகையான சவாலாகும்.

சிரேஷ்ட வீரர்களான சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன எனக்கு எப்பொழுதும் ஆதரவு தருவார்கள். அவர்களின் அனுபவம், திறமை என்பன இலங்கை அணிக்கு கட்டாய அவசியமாக உள்ளது. அவர்களுடன் இணைந்து சிறப்பான முறையில் பணியாற்ற விரும்புகின்றேன்.

மெல்போர்ன் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்த முயற்சிக்கும். மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் இப்போட்டியில் பங்குபற்றுவது சிறப்பான பெருமை எனவும் தெரிவித்துள்ளார்.

## நாளை அரையிறுதி

(நெல்லியடி)

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதிப் போட்டி நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவந்தது.

நாளை நடைபெறும் முதலாவது அரையிறுதிப் போட்டியில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணியினை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. நாளை மறுதினம் நடைபெறவுள்ள போட்டியில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழத்தினை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (12)

## வென்றது எஸ்.பி.எல்.

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை யூனியன் அணிக்கெதிரான ருவெண்ரி-20 கிரிக்கெட் போட்டியில் நாவாந்துறை எஸ்.பி. எல். அணி ஏழு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

கொழும்புத்துறை, யூனியன், நாவாந்துறை எஸ்.பி.எல். அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ ருவெண்ரி-20 கிரிக்கெட் போட்டியொன்று நேற்று முன்தினம் கொழும்புத்துறை யூனியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற எஸ்.பி.எல். அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய கொழும்புத்துறை யூனியன் அணி 12 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லக்ஸ்மன் 20, தீபன் 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரோஜன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 74 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நாவாந்துறை எஸ்.பி.எல். அணி 9 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மைக்கல் ஜோன் 48, மில்லர் 20 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் கபில், திலீபன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி.)

# இறுதிப் போட்டியில் சந்திரன், இளம்பறவையன் அணிகள்


(அளம்பில்)


முல்லைத்தீவு இராணுவப் படைப் பிரிவினரால் நடத்தப்பட்டு வரும் கால்பந்துப் போட்டியில் சந்திரன் மற்றும் இளம் பறவையன் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளன.

முல்லைத்தீவு இராணுவ படைப்பிரிவினால் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று அளம்பில் விளையாட்டு மைதானத்தில் நடத்தி வந்தது. மேற்படி சுற்றுப் போட்டிகளின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் சந்திரன் விளையாட்டுக் கழகமும், சென்.யூட் விளையாட்டுக் கழகமும் மோதியது. இப்போட்டியில் சந்திரன் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியினை எதிர்த்து சிலாவத்தை இளம் பறவையன் விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் இரு அணிகளும் போட்டி முடிவடையும் வரையும் கோல் எதனையும் போடவில்லை. பின்னர் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் இளம் பறவையன் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.





ஜப்பாய் கராத்தே பரடேஷன் மலேசியா பிரதிநிதி சிகான் முருகேசுவினால் அண்மையில் கொழும்பில் கராத்தே பயிற்சி பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. இதில் யாழ். மாவட்டம் சார்பாக பங்குபற்றிய சோட்டோகான் கராத்தே அக்கடமி இன்ரனஷனல் கழகத்தின் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சென்செய் துஷானந் சிகான் முருகேசுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், யாழ். மாவட்டம் சார்பாக பயிற்சி பட்டறையில் பங்குகொண்ட சென்செய் துஷானந், சென்செய் முருகானந்தன், செய்செய் சந்திரகுமார், சென்செய் சாந்தரூபன், செய்செய் குகதாஸ், சென்பை விக்கினேஸ்வரன், சென்பை ராசன், சர்வதன், செந்தூர் அழகன், சென்செய் செல்வகுமார், கிருஷ்னதாஸ், சசிகரன் ஆகியோரைக் காணலாம். (எஸ்.பி.)

## வென்றது மகாதீபம்

(கிளிநொச்சி)

மத்தியதீரர் அணிக்கெதிரான ருவெண்ரி-20 போட்டியில் மகாதீபம் அணி அபார வெற்றிபெற்றது.

கிளிநொச்சி மகாதீபம் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் முக்கோண ருவெண்ரி-20 கிரிக்கெட் போட்டி கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகா தீபம் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மத்தியதீரர் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தங்கராஜா 53, வினோத் 28, செந்தூரன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கீர்த்தன் நான்கு, அனற்டிலோசன், ரவிக்குமார் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 156 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மகா தீபம் அணி, அனற்டிலோசனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 19.2 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அனற்டிலோசன் 54, கிருபாகரன் 24, கீர்த்தன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜீத் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.




## கரம் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரம் சங்கம் நடத்தும் கரம் சுற்றுப் போட்டி எதிர்வரும் 29,30ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

கழகங்களுக்கிடையில் இடம்பெறவுள்ள இப்போட்டி, ஆண், பெண் என இரு பிவிரினருக்குமிடையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்களை விரைவில் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும், போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் தமது கரம் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும், போட்டிக்கான நிரல் தயாரிப்பு எதிர்வரும் 28ஆம் திகதி இடம்பெறும் என்றும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் போட்டியில் வெற்றிபெறுவோருக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐங்கரன், கபில்ராஜ் சிறப்பான செயற்பாடு மத்திய கல்லூரியை வென்றது சென்.ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

ஐங்கரன், கபில்ராஜ் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 153 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

சென். ஜோன்ஸ் மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ ஒரு நாள் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஐங்கரன் ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 42, சோரொபன் நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 24, அபினாஸ், சபிஸ் ஆகியோர் தலா 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அன்றுசன் நான்கு, மதுசன், சுகிர்தன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 223 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி 17 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் லோகன் 15, மதுசன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கபில்ராஜ் நான்கு, யதுசன், சிந்துஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை, இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அடுத்த வருடம் இடம்பெறவுள்ள நிலையில், அதற்கு பயிற்சிக் களமாக சிநேகபூர்வ ஆட்டங்களில் யாழ். மாவட்ட பாடசாலை அணிகள் மோதி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)



# ஏழைமக்களைக் கணக்கெடுக்காத அநாகரிகத் தமிழ் அரசியல்!

- யதீந்திரா கட்டுரையிலிருந்து.

சில தினங்களுக்கு முன்னர், இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்ட பெண்கள் 15 பேர் உளவியல் ரீதியாக பாதிப்படைந்ததைத் தொடர்ந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து இவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டிருக்கலாம் - இதன் காரணமாகவே அவர்கள் மனோரீதியாக பாதிப்படைந்த தாகவும் ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் பின்னர், இது குறித்து பி.பி.சி தமிழ்ச் சேவைக்கு கருத்துத் தெரிவித்திருந்த வவுனியா மருத்துவமனையின் உளநல மருத்துவரான சிவசுப்பிரமணியம் சிவதாஸ் இந்த குற்றசாட்டை முற்றிலுமாக நிராகரித்ததுடன், அத்தகைய அவதூறுகளை, ஊடக அத்துமீறலாகவும் அரசியல் அத்துமீறலாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இது பற்றி சிவதாஸ் மேலும் தெரிவிக்கையில், தான் ஒவ்வொருவரையும் தனித்தனியாக விசாரித்ததாகவும், அவர்கள் அனைவரும் தங்கள் மீது விழுந்துள்ள இந்த களங்கத்தை போக்கும் வகையில் உண்மையை சொல்லுமாறு மன்றாடியதாகவும் குறிப்பிட்டிருந்தார். தவிர, அவர்கள் எவரும் எந்தவொரு வற்புறுத்தலின் பேரிலும் இராணுவத்தில் இணைந்து கொள்ளவில்லை, மாறாக விரும்பியே இணைந்து கொண்டனர் என்றும் அவர் தெரிவித்திருந்தார். அந்தப் பெண்கள் அனைவரும் உள்மன முரண்பாடு என்னும் உளநோய்க்கு ஆளாகியிருப்பதாகவும், போருக்கு பின்னர் வன்னியில் இவ்வாறான பாதிப்புக்குள்ளான பலரை தான் கண்டிருப்பதாக வும் சிவதாஸ் குறிப்பிட்டிருக் கின்றார். இதன் மூலம் ஒரு அநாகரிகமான பழியில் இருந்து அப் பெண்களை வைத்தியர் சிவதாஸ் விடுவித்திருக்கிறார். தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாக கூறிவரும் அரசியல் தலைவர்கள் செய்ய வேண்டிய வேலையை ஒரு வைத்தியர் செய்திருக்கின்றார். ஆனால் இதன் பின்னரும் கூட இத்தகைய அவதூறுகளை பரப்பியவர்கள் தங்கள் செயலுக்காக வருத்தம் தெரிவிக்கவோ, மன்னிப்புக் கோரவோ இல்லை.

இச்சம்பவம் முன்னிறுத்தும் கேள்வி - தமிழ் அரசியல்வாதிகளுக்கும் மனச்சாட்சிக்கும் இடையிலான உறவு முற்றிலுமாக அறுந்துவிட்டதா? எப்படியாவது இலாபம் சம்பாதித்தால் சரி, என்னும் மனோநிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு வியாபாரியின் மனோநிலையே இன்று தமிழ் அரசியல் சக்திகள் என்போரையும் பீடித்திருக்கிறது. அகப்பட்ட எல்லாவற்றையும் எந்தவொரு பொறுப்பும் குற்றவுணர்வும் இன்றி துருப்புச் சீட்டாக கையாளும் ஒரு சூழல் இன்று தமிழ் அரசியல் அரங்கில் வெளித்தெரிகிறது. இதன் வெளிப்பாடுதான் எந்தவிதமான பொறுப்பும் இன்றி, ஏழைப் பெண்களின் மானத்தை வைத்து அரசியல் செய்யும் இழி நிலைக்கு, இன்று தமிழர் அரசியல் தரம் தாழ்ந்திருக்கிறது.

இவ்வாறு அவமதிக்கப்பட்ட அனைத்து பெண் பிள்ளை களும், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் அனைவரும் அடுத்தவேளை உணவுக்காக என்ன செய்வதென்று தெரியாத நிலையில்தான், இலங்கை இராணுவத்தில் இணைந்துகொள்ள தீர்மானித்திருக்கின்றனர். எனவே பொருளாதார ரீதியான நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில்தான், அவர்கள் இத்தகையதொரு முடிவை எடுத்திருக்கின்றனர். எதிர்காலத்தில் இன்னும் பல இளம் ஆண்களும் பெண்களும் இந்த முடிவை எடுக்கக் கூடும். எனவே இந்த யதார்த்தத்தை விளங்கிக் கொண்டு, அவர்களது பிரச்சினைகளை கண்ணியத்துடன் கையாள வேண்டிய பொறுப்பு தமிழ்த் தலைமைகளுக்கு உண்டு.

இந்த இடத்தில் பிறிதொரு கேள்வியையும் கேட்டுக் கொள்ளலாம் - உண்மையில் இன்று எந்தவிதமான குற்றவுணர்வும் இன்றி மேற்படி பெண்களை கேவலப்படுத்தியவர்கள், இவ்வாறானதொரு நிலைமை தங்களது பெண்பிள்ளைகளுக்கோ, அல்லது உறவினர்களது பிள்ளைகளுக்கோ ஏற்பட்டிருந்தால், இவ்வாறு பொறுப்பற்று அவர்கள் எல்லோரும் பாலியல் வல்லுறவிற்கு ஆளானவர்கள் என்று அறிவித்திருப்பார்களா? அவ்வாறான செய்திகள் ஊடகங்களில் வெளிவருவதை அனுமதித்திருப்பார்களா? ஆனால் குறித்த பெண்கள் தொடர்பில் எந்த தயக்கமும் இன்றி அவர்களால் இவ்வாறு சொல்ல முடிந்திருக்கிறது. எப்படி இது சாத்தியப்பட்டது? ஏனெனில் அவர்கள் அனைவரும் ஏழைகள். ஏழைகளை எப்படி வேண்டு மானாலும் சொல்லலாம், எவரும் கேட்கப் போவதில்லை. இத்தகைதொரு அநாகரிக அரசியல் தமிழ்ச் சூழலில் நீண்டகாலமாக அரங்கேறி வருகிறது. அது இப்போது உச்ச நிலையை அடைந்திருக்கிறது.

ஆரம்பத்தில் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான உபாயமாக கைக்கொள்ளப்பட்ட இத்தகைய அவதூறு பரப்பும் உபாயம், காலப்போக்கில் தமிழ்ச் சூழலின் ஒட்டுமொத்த அரசியல் போக்காகவே மாறியது. எவர் பற்றியும் எப்படியும் பேசலாம், எப்படியும் ஒருவரை கேவலப்படுத்தலாம், எவருக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியதில்லை என்னும் நிலைமை உருவாகி யது. ஆனால் அனைத்துவகை வசைபாடலுக்குப் பின்னாலும், தமிழ்த் தேசியம் என்னும் இரு சொல்லை போட்டுவிட்டால் போதும். உருவாக்கப்பட்ட கற்பனைகளுடன் தமிழ்த் தேசியம் என்னும் கொடியை உயர்த்தியவர்கள் எல்லோரும், உயர்ந்த மனிதர்களாக போற்றப்பட, ஏனையோர் துரோகிகளாகவும், அரசின் கைக்கூலிகளாகவும் சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். உடன்பாடுகளுடனும் முரண்பாடுகளுடனும்தான் மனிதர்கள் பயணிக்க முடியும் என்னும் அடிப்படையான உண்மை குழி தோண்டி புதைக்கப்பட்டது.

அரசாங்கங்களின் எதேச்சாதிகார அணுகுமுறை களால் வெறுப்புற்றிருந்த சாதாரண தமிழ் மக்களும் இவற்றை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப் பழகிக் கொண்டனர். அரசியல் வியாபாரிகள் மத்தியில் அவதூறு என்பது நல்ல இலாபம் சம்பாதிப்பதற் கான பண்டமானது. விடுதலைப்புலிகள் தலைமையிலான ஆயுத அரசியல் முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற்ற பின்னர்,

இந்த நிலைமை மேலும் மோசமடைந்தது. முன்னர் ஒரு வழிகாட்டலில் கையாளப்பட்ட இத்தகைய உபாயம், தற்போது தலைவிரித்தாடுகிறது. அதுவரை அரசியலை விமர்சிப்போர் மீதும், ஒத்துப்போக மறுத்தவர்கள் மீதும் வீசப்பட்ட இத்தகைய கற்கள், தற்போது சாதாரண ஏழை மக்கள் மீதும் வீசப்படுகின்றன. இதன் ஆரம்பமே மேற்படி பெண்களை கேவலப் படுத்துவதன் மூலம் தங்களின் அரச எதிர்ப்பு அரசியலை பலப்படுத்திக் கொள்ள சிலர் முயன்றிருக்கின்றனர்.

இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. தமிழ் மக்களின் நலன்சார்ந்து சிந்திப்போர் இது குறித்து கரிசனை கொள்ள வேண்டியது கட்டாயமான ஒன்றாகும்.





## சொல்லின் செல்வர்

இராமாயணத்தில் ஆஞ்சநேயருக்கு சிறப்பான ஒரு இடம் உண்டு. தான் வைகுண்டம் போகும் போது, ஆஞ்சநேயரை பார்த்து, "நீயும் வைகுண்டம் வருகிறாயா?" என்று கேட்டார் ராமர்.

அதற்கு, "வைகுண்டத்தில் இராமாயண ஓதுதல் உண்டா?" என்றார் ஆஞ்சநேயர். "அதெல்லாம் அங்கு கிடையாது. வைகுண்ட தரிசனம் செய்யலாம் அவ்வளவு தான்..." என்றார் இராமர்.

"அப்படியானால், இராமாயண ஓதுதல் இல்லாத வைகுண்டம் எனக்கு வேண்டாம். நான் பூலோகத்திலேயே இருந்து, எங்கெல்லாம் இராமா யணம் நடக்கிறதோ, அங்கே உட்கார்ந்து இராம நாமத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நான் வைகுண்டம் வரவில்லை..." என்று சொல்லி விட்டார் ஆஞ்சநேயர்.

இப்போதும் கூட, ஆஞ்சநேயர் இல்லாத கோவிலே கிடையாது எனலாம். கிராமங்களில் இராமாயணம் நடைபெறும் இடங்களில், தனியாக ஒரு பலகை போட்டு, அதில் கோலமிட்டு வைப்பதுண்டு. அந்தப் பலகையில் அமர்ந்து ஆஞ்சநேயர், இராமாயணம் கேட்பதாக ஐதீகம். இராமாயணத்தில் பெரும் பங்கு வகித்தவர் ஆஞ்சநேயர் தான்.

ஆஞ்சநேயரை சொல்லின் செல்வர் என்பதுண்டு. இராமதூதனாக இராவணன் முன் நின்ற போது, "நீ யார்?" என்று இராவணன் கேட்டபோது, "வாலி" என்று ஆரம்பித்ததுமே இராவணன் நடுங்கி விட்டான்.

"அப்படிப்பட்ட வாலியை வதம் செய்த இராம தூதன் நான்..." என்றார் ஆஞ்சநேயர்.

"தூது செல்வார்
இயற்கை துங்க வாள் உருவி
க்ரோதமாய் கேட்பார் முன்
கூறுவன கூறல் வேண்டும்..."
என்றுள்ளது. தன் தலைவனைப் பற்றியும், தன்னைப் பற்றியும் பெருமைப்பட கூற வேண்டும் தூதுவன்.

தன்னைப் பற்றியும், மிகவும் பெருமையாகப் பேசினார் ஆஞ்சநேயர். சீதையை தேடி இலங்கை சென்று திரும்பும் போது, மற்ற வானர வீரர்கள் மற்றும் இராம, லட்சுமணர், இவருடைய வருகைக்காகவும், இவர் கொண்டு வரும் செய்திக்காகவும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.


வரும்போதே, "கண்டேன் கற்புடைய சீதையை..." என்று சொல்லியபடி வந்தார் ஆஞ்சநேயர். இலங்கையில் சீதை யைக் கண்டதையும், சீதை கற்புநெறி தவறாமல் இருப்பதையும், இப்படி சுருக்கமாகக் கூறினார் ஆஞ்சநேயர். அதனால்தான் அவரை சொல்லின் செல்வர் என்றனர்.

இராமாயணத்தில் முக்கிய பங்கு வகிப்பவர் ஆஞ்சநேயர். ஆஞ்சநேயப் பிரபாவம் என்று தனியாகவே உள்ளது.

# அறிந்து கொள்ள...



- சிதம்பரம் நடராஜர் கோவிலின் கூரையில், 21 ஆயிரம் பொன் ஓடுகளை, 72 ஆயிரம் பொன் ஆணிகளால் அடித்துப் பொருத்தி இருக்கின்றனர். நாம் தினம் 21 ஆயிரம் தடவை மூச்சு விடுவதாகவும், நம்முடைய உடம்பில், 72 ஆயிரம் நரம்புகள் இருப்பதையும் குறிக்கவே அப்படிச் செய்திருக்கின்றனர் என்று சொல்லப்படுகிறது.
- ஒட்டகத்தின் முதுகுப் பகுதியிலுள்ள திமில் போன்ற மேடான பகுதியில்தான் கொழுப்பு உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.
- மனிதர்களின் முகவேறுபாட்டுக்கு அடிப்படைக் காரணம் - மரபணுக்கள் எனப்படும் ஜீன்கள்.
- முடி அல்லது ரோமம் என்பதில் கடினமான கெரோட்டின் என்ற புரதப் பொருட்கள் உள்ளன.
- நிறமில்லாத இரத்தத்தைக் கொண்ட பூச்சியினம் கரப்பான் பூச்சி ஆகும்.
- டை·.போய்ட் நோய் உடலின் குடல் பகுதியைப் பாதிக்கின்றது.
- ஓடியோமீற்றர் என்ற கருவி, மனிதனின் கேட்கும் திறனை ஆராயப் பயன்படுத்தப்படுகிறது.
- சம்பா நடனத்துக்குப் புகழ்பெற்ற நாடு - பிரேசில்
- தொழில்புரட்சி முதன்முதலில் நடந்த நாடு - இங்கிலாந்து




- மெக்சிகோவில் உப்பைக் கடவுளாக வழிபட்டனர்.
- ஐரோப்பாவில் அந்த்க்காலத்தில் சம்பளமாக உப்பையே வழங்கினர்.
- கடல் நீரில் 6 சதவிகிதம் உப்பு உள்ளது.
- உப்பில் எந்த விதத்திலும் தாதுப்பொருள்கள் கிடையாது.
- 5 சதவிகித உப்பு கொண்ட மண்ணில் பயிர்கள் வளராது.
- மாங்குரோவ் காடுகளில் உள்ள தாவரங்கள் உப்பு நீரில் மட்டுமே வளரும்.

(நித்யஸ்ரீ) மகாதேவனின் மரணம்...



# அந்த ஒரு கணம்!

**- அ.மார்க்ஸ் -**

இசை பற்றி நமக்குப் பெரிய அறிவில்லாதபோதும், மனிதராகப் பிறந்த நாம் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் இசை ரசிகர்கள்தானே? ரசிப்பதற்கு எதற்கு இலக்கண அறிவு? ஒரு வகையில் இலக்கண அறிவு ரசனையைக் கொல்லும் அல்லவா?

கர்நாடக, இந்துஸ்தானி, மேற்கத்திய இசை இலக்கணங்கள் எதுவும் எனக்குத் தெரியாது என்றபோதிலும் எல்லாவற்றையும் ரசிக்கும் மனம் எல்லா மனிதர்களையும் போல எனக்கும் உண்டு.

நேற்றிரவு நித்யஸ்ரீயின் கணவர் மகாதேவனின் தற்கொலை குறித்து கேள்விப்பட்ட போது துடித்துப் போனேன். ஒரு மாதத்திற்கு முன்புதான் ஒரு முஸ்லிம் நண்பரது காரில் நித்யஸ்ரீ பாடிய பாரதியின் "அல்லா.. அல்லா" பாடலைக் கேட்டு மனம் கசிந்திருந்தேன்.

என்ன பிரச்சினை, நமக்கு முழுதும் தெரியாது. தெரிந்து கொள்ளும் ஆவலும் இல்லை. ஆனால் மகாதேவன் தனது வாகன "பற்றரி"யை மாற்றச் சென்றபோது, திடீரென வண்டியைத் திருப்பி, கோட்டூர்புரம் அடையாற்றுப் பாலத்தில் நிறுத்திவிட்டு, ஓடிப்போய் நதியில் விழுந்து இறந்தார் என அறிந்தபோது துடித்துப் போனேன்.

ஒரு கணத்தில் மனித மனத்தில் என்ன நிகழ்ந்தது? எத்தனை பிரச்சினைகள் பின்னணியில் இருந்தபோதும் இந்தத் திடீர் முடிவை இன்றைய விஞ்ஞானத்தால் விளக்கிவிட இயலுமா?

டெல்லியில் ஒரு பெண்ணைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கிய அறுவரில் ஒருவர், "நான் தவறு செய்துவிட்டேன்... என்னைத் தூக்கில் போடுங்கள்..." என நீதிமன்றத்தில் கதறியதுதான் என் நினைவுக்கு வந்தது. அந்த ஒரு கணத்தில் அப்படியான ஒரு கொடூரத்தை செய்யத் துணிந்ததன் சமூகப் பின்புலம் என்ன?

அந்த ஒரு கணத்தில், பின் இருக்கையில் அமர்ந்திருந்த வாகன ஓட்டுனர், இதை எதிர்பார்த்து, ஓடித் தடுத்திருந்தாரானால் மகாதேவன் இன்னும் 50 ஆண்டு காலம் வாழ்ந்திருக்கக் கூடும். அந்த ஒரு கணத்தில் வெறிக்கு ஆட்படாமலிருந்திருந்தால் டெல்லிக் கொடூரம் நடக்காதிருந்திருக்கக் கூடும்.

இந்தக் கொடுமைகளில், துயரங்களில் நமக்கெல்லாம் பங்கில்லையா? இன்றைய சமூக நடைமுறைகள், சமூக மதிப்பீடுகள் இவை எல்லாம் இதில் பங்கு வகிக்கவில்லையா? இந்தத் தற்கொலைக்கும் பாலியல் வன்முறைக்கும் மகாதேவனும், அந்த வன்முறையாளர்களும் மட்டுமா காரணம்? இந்தச் சமூகத்திற்கு, நமக்கு, இதிலெல்லாம் பங்கில்லையா? தண்டனைகளை அதிகரிப்பதன் மூலமே இதை எல்லாம் சரி செய்துவிட இயலுமா?

"பழிக்குப் பழி" என்கிற மனநிலை பிரச்சினைகளைத் தீர்த்துவிடுமா? ஆனால் பொதுப் புத்தி பழிக்குப் பழியென்கிறதே? RETRIBUTION தீர்வாகுமா? இந்த மனநிலையிலிருந்து எப்போது நாம் விடுதலை அடையப் போகிறோம்?

காந்தி அடிகள் அப்போதே சொன்னாரே: "கண்ணுக்குக் கண் என்றால் கடைசியில் நமக்கு எஞ்சுவது குருடர்களின் உலகமாகத்தான் இருக்கும்"

# நீதானே என் பொன் வசந்தம்

மீண்டுமொரு கௌதம் மேனனின் காதல் கதை. வாரணம் ஆயிரம், விண்ணைத்தாண்டி வருவாயா... வரிசையில் நீ தானே என் பொன் வசந்தமும் சேர்ந்து கொண்டுள்ளது. வழக்கமான சினிமா சம்பிரதாயங்களை விட்டு குத்து நடனம், சண்டைக்காட்சி, வில்லத்தனம், அடித்து நொருக்கல் எதுவுமே இல்லாமல் ஒரு இதமான படைப்பு

கணிசமான விண்ணைத்தாண்டி வருவாயாவின் சாயல் இருந்தாலும் வசனங்கள் மணிரத்தினத்தின் வசனங்கள்போல வெட்டி வெட்டி சிக்கனமாக இருக்கிறது. தகுந்த ஒலி நயம் இல்லாவிட்டால் கிசுகிசுப்பான உரையாடல்கள் விளங்காமல் இருக்க சந்தர்ப்பம் உள்ளது.

அவ்வப்போது சந்தானம் நகைச்சுவைக்கு வந்து போகின்றார். மிகுதியை ஆக்கிரமித்துக்கொள்வது நாயகனும் நாயகியும் தான்

இரண்டாம் தர ஹீரோவாக இருந்த சூர்யாவை காக்க காக்க...வுடன் மிகப்பிரமாதமான ஒரு நடிகராக (Handsome) காட்டியது போல ஜீவாவுக்கும் இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இளமைத் தோற்றத்துடன் Handsome ஆக இருக்கின்றார்.

நாயகி விண்ணைத்தாண்டி வருவாயாவில் இரண்டாவது நடிகையாக இருந்து "நான் ஈ" படம் மூலம் நல்ல வரவேற்பைப் பெற்றவர். அபாரமாக நடித்து இருக்கின்றார். கோடம்பாக்கத்தில் ஒரு வலம் வர வாய்ப்புள்ளது.

ஜீவாவும் தன் பங்குக்கு சிறப்பாக செய்திருக்கின்றார். "கோ" படம்மூலம் வந்த ஒரு Romontic Hero என்ற பட்டத்தை இந்த படம் மூலம் இன்னும் பிரகாசப்படுத்தியுள்ளார்.

.சின்னவயது காதல்... முன்கோபம், முறிவு, பிரிவு... மீண்டும் பள்ளியில் காதல்... கோபம்... முறிவு... பிரிவு... மீண்டும் கல்லூரியில் காதல்.... கோபம்... முறிவு... பிரிவு... கடைசியில் என்னவானார்கள் என்பது தான் கதை.

Husky dialogues மூலம் காதலை இன்னும் மெருகேற்றியிருக்கிறார் இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன். நாயகி விண்ணைத்தாண்டி வருவாயாவில் சிறிய அளவிலேயே வந்து போனாலும், அந்தப் படத்திலேயே நன்கு கவனிக்கப்பட்டவர். நான் ஈ மூலம் அதனை உறுதிப்படுத்தி இதில் வெற்றி பெற்றுள்ளார் எனச் சொல்ல வேண்டும். காதல், கோபம், இன்பம், துன்பம், வெறுப்பு, ஏமாற்றம் என்று விதவிதமாக நடித்து இருக்கிறார்.

இசை - இளையராஜா இளமைத்துள்ளலோடு இருக்க முயன்றிருக்கிறார். படத்தின் கணிசமான இடங்களுக்கு பின்னணி இசையை மௌனமாக்கியிருக்கிறார். ஏனெனில் வசனங்கள் அவ்வளவு கிசுகிசு வசனங்கள். மௌனமான பின்னணியும் நன்றாகவேயுள்ளது.

நீதானே என் பொன்வசந்தம் remix உம் அது பாடப்பட்ட சூழலும் வாயசைத்த ஜீவாவும் சிறப்பாக இருந்தன. ஏனைய பாடல்கள் படத்துடன் பொருந்திப் போனாலும் தனிப்பாடல்கள் என்ற வகையில் பெரிதாகப் பேசப்படவில்லை.

சந்தானத்துக்கு ஜோடியாக நடித்த குண்டுப் பெண்ணும் குறிப்பிடப்படவேண்டியவர். தனது பகுதியைப் புரிந்து கொண்டு செய்திருந்தார்.



ஒளிப்பதிவும் இதமாக இருந்தது. ஆனாலும் கல்யாணத்துக்கு ஒரு அரை மணித்தியாலம் முன்பதாக அதை நிற்பாட்டுவதாக தெரிவித்திருப்பது கொஞ்சம் ஓவர்.

ஆனாலும் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடக்கவே செய்கின்றது. அண்மையில் கொக்குவிலில் ஒரு ஆலய திருமணமண்டபத்தில் மாப்பிள்ளை காத்திருக்க மணமகள் வேறு ஒரு-வருடன் ஓடிவிட்டதாக செய்தி வெளிவந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# வேற்று கிரகவாசிகள்

**இந்த** பிரபஞ்சத்தில் பூமியன்றி, வேறு கோள்களில், உயிர்கள் இருக்கின்றனவா அல்லது நாம் மட்டும் இந்த பிரமாண்டத்தில் தனிமையில் இருக்கிறோமா என்ற கேள்வி அனைவரையும் கவர்ந்த ஒன்று.

பிரபஞ்சத்தில் உயிர்கள் இருக்கின்றன, அதுவும் பல கோள்களில் இருக்க வாய்ப்பு உள்ளது என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

சில நூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு கண்டத்தில் இருக்கும் மனிதன், மற்ற கண்டங்களில் மனிதர்கள் வாழ்வது தெரியாமல் இருந்தான். அது போல நாமும் இப்பொழுது மற்ற கோள்களில் வாழும் உயிர்களைப் பற்றி அறியாமல் வாழ்கிறோமோ?

நம் பூமியில் மட்டுமில்லாது மற்ற கோள்களிலும் உயிர்கள் இருக்கின்றன என்பதற்கு, அறிவியலாளர்கள் மிக் எளிமையான ஒரு வாதத்தை முன் வைக்கின்றனர். 'மாவெடிப்பு (BIG BANG) நடந்த போது இந்த பிரபஞ்சத்தில் ஒன்றுமே இல்லை. இந்த பூமியே இல்லை. ஐதரசன் மற்றும் ஹீலியம் என்ற இரண்டு மூலகங்கள் மட்டும் தான் முதலில் தோன்றின. இந்த பிரபஞ்சத்தில் நாம் காணும் சகல நட்சத்திரங்களும், கோள்களும், அந்த ஐதரசன் மற்றும் ஹீலியம் ஆகிய அடிப்படை மூலகங்கள் பல இரசாயன மாற்றங்கள் அடைந்து உண்டானவை. அப்படி அந்த இரண்டு மூலகங்களிலிருந்து உண்டான கோடான கோடி கோள்கள் அனைத்திலும் உயிர் உண்டாகி பரிணாம வளர்ச்சி அடைய முடியாமல், அவைகளில் ஒன்றான நம் கோளில் மட்டும் தான் அது சாத்தியமானது என்று கூறுவது தவறு' என்பது தான் அந்த வாதம்.

400 பாகை செல்சியஸ் வெப்ப நிலையும் பல நச்சு இரசாயனங்களும் நிறைந்த இந்த நீரூற்றை ஆய்ந்த ஆய்வாளர்கள், ஒரு மிகப் பெரிய அதிசயத்தைக் கண்டனர். அங்கே பல உயிர்கள் அந்த இரசாயனப் பொருட்களையே உணவாக உண்டு, சூரிய வெளிச்சம் சற்றும் இல்லாத அந்த இடத்தில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அறிவியலாளர்கள் அப்போதுதான் உணர்ந்தார்கள், பிரபஞ்சத்தின் எந்த மோசமான இடத்திலும் உயிர்கள் வளர சாத்தியம் உண்டு என்று. இன்று, பிரபஞ்சத்தில் உயிர்கள் வேறு கோள்களில் இருக்கின்றனவா என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டனர். ஆதாரம் கிடைப்பது தான் இனி நடக்க வேண்டியது.

நம் சூரிய மண்டலத்திலேயே, குறிப்பாக செவ்வாயிலும் மற்றும் சில கோள்களின் நிலவுகளிலுமே உயிரினங்கள் இருக்க அதிக வாய்ப்புண்டு என்ற முடிவுக்கு வருகின்றனர் அறிவியலாளர்கள். நம்முடைய சூரிய குடும்பத்திலேயே உயிர் இருக்க வாய்ப்பு உள்ளபோது பிரபஞ்சத்தின் மற்ற கோடான கோடி கோள்களில் சிலவற்றில் அது சாத்தியமாகாதா?


பல கோள்கள், அது சுற்றிவரும் நட்சத்திரங்களுக்கு அருகாமையில் இருந்தால் அதிக வெப்பத்தின் காரணமாகவும், நட்சத்திரங்களிலிருந்து அதிக தொலைவில் இருந்தால் வெப்பம் இன்மை காரணமாகவும், உயிர் தோன்ற ஏதுவாக இல்லாமல் இருந்திருக்கலாம். சூரியனுக்கு அருகிலுள்ள புதன் சுமார் 450 பாகை செல்சியஸ் வெப்பத்தில் வாடிக்கொண்டிருக்கின்றது. சூரியனிலிருந்து தொலைவில் உள்ள கோள்களும் அதன் நிலவுகளும் வெப்பமே இல்லாமல் இருக்கின்றன.

நம் சூரிய குடும்பத்தில் சுற்றிவரும் பாறைகளிலும் (asteroid), வால் நட்சத்திரங்களிலும் (comets) உயிர் உண்டாவதற்கான அடிப்படை இரசாயன மூலக்கூறுகள் காணப்படுவது பிரபஞ்சத்தில் உயிர் இருப்பதற்கு ஒரு சான்று எனக்



கொள்ளலாம். நம் கோளுக்கு பிரபஞ்சத்திலிருந்து, இந்த வகையான சூரிய குடும்பத்தைச் சுற்றிவரும் பாறைகளின் மூலமும், உயிர்கள் வந்திருக்க வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்று அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.

1977 இல் கடலுக்கு அடியில் சுமார் 7000 அடி ஆழத்தில் வெப்ப நீர் ஊற்றுக்களை கண்டுபிடித்தனர். 400 பாகை செல்சியஸ் வெப்பநிலை கொண்ட அந்த நீரூற்றுக்கள் கடலின் தரை மட்டத்தில், பூமிக்குள்ளே உள்ள எரிமலை குழம்புகளினால் சூடாக்கப்பட்டு வெளியே வேகமாக வருகின்றன. பல நச்சு இரசாயனங்கள் நிறைந்த இந்த நீரூற்றை ஆய்ந்த ஆய்வாளர்கள், ஒரு மிகப் பெரிய அதிசயத்தைக் கண்டனர். அங்கே பல உயிர்கள் அந்த இரசாயனப் பொருட்களையே உணவாக உண்டு, சூரிய வெளிச்சம் சற்றும் இல்லாத அந்த இடத்தில் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன.



உயிர்கள் வாழ முடியவே முடியாது என்று நினைத்த இடத்தில், உயிர்களைக் கண்ட அறிவியலாளர்கள் அப்போதுதான் உணர்ந்தார்கள், பிரபஞ்சத்தின் எந்த மோசமான இடத்திலும் உயிர்கள் வளர சாத்தியம் உண்டு என்று.

அதுமாத்திரமல்ல, உறை நிலைக்கு மிகக்குறைவான ஆர்க்டிக் துருவப் பிரதேசங்களிலும், மிக அமிலத்தன்மை கொண்ட இடங்களிலும், உயிர்கள் வாழ்வதைக் கண்ட அறிவியலாளர்கள், பிரபஞ்சத்தில் உயிர்கள் வேறு கோள்களில் இருக்கின்றனவா என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர். ஆதாரம் கிடைப்பதுதான் இனி நடக்க வேண்டியது.

பிரபஞ்சத்தில் உயிர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதலாவது, பரிணாம வளர்ச்சி அடையாத பற்றீரியா போன்ற உயிரினங்கள். இரண்டாவது, மனிதனைப் போன்ற அறிவுஜீவிகள். மூன்றாவது மனிதனை விட அதிக அறிவியல் வளர்ச்சி கண்ட உயிர்கள். அவர்களுக்கு நாம் 'சூப்பர் மனிதர்கள்' என்று பெயர் கொடுப்போம். இரண்டாவது வகை, மூன்றாவது வகை உயிர்கள் உருவத்தில் மனிதர்களைப்போல இருப்பார்கள் என்று கற்பனை செய்து கொள்ள வேண்டாம். சில திரைப்படங்களில் அவர்களது உருவங்களை கற்பனை செய்து சித்தரித்திருப்பார்கள். அதை விட மோசமான உருவமாக இருந்தாலும் ஆச்சரியப் பட வேண்டாம்.

நம் கேள்வியெல்லாம் மனிதன் போன்று வளர்ச்சியடைந்த உயிர்களும், அதனிலும் அதிக வளர்ச்சி கண்ட 'சூப்பர் மனிதர்களும்' உள்ளனரா? உண்டு என்றால் அவர்கள் நம்மை ஏன் நம்மை தொடர்பு கொள்ளவில்லை என்பதுதான்.

அண்டத்தில் அறிவுஜீவிகளை தேடும் பணியானது, 'செற்றி' (SETI—SEARCH FOR EXTRA TERRESTRIAL INTELLIGENCE) என்ற அமைப்பினால் பிரபஞ்சத்தில் எங்கிருந்தாவது செயற்கை ரேடியோ கதிரலைகள் பூமிக்கு வருகின்றனவா என்று கவனிப்பதுதான். பிரபஞ்சத்திலிருந்து பல காரணங்களினால் இயற்கையாக ரேடியோ கதிரலைகள் பூமிக்கு வரும். ஆனால் வேற்றுக் கோள் அறிவுஜீவிகள் செயற்கையாக உண்டாக்கிடும் கதிரலைகளை அறிவியலாளர்கள் பிரித்து அறிய முடியும். அவ்வாறு செய்திகள் வந்தால் அதுதான் வேற்று கோளில் நம்மைப் போன்ற அறிவுஜீவிகள் வாழ்வதற்கு அடையாளமாகும். இதற்காக அதிநவீன ரேடியோ தொலைநோக்கிகளை உபயோகித்து இரவு பகல் என்று பாராமல் வருடம் முழுவதும் வானத்தை ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

1930 ஆம் ஆண்டுகளில் நாம் பூமியில் உபயோகிக்க ஆரம்பித்த ரேடியோ அலைகள், பிரபஞ்சத்திலும் பயணம் செய்ய ஆரம்பித்துள்ளன. 1930லிருந்து 2012 வரை, சுமார் எண்பது ஆண்டுகள், இவை ஒளியின் வேகத்தில் அதாவது வினாடிக்கு மூன்று லட்சம் கிலோ மீற்றர் என்ற வேகத்தில் பயணம் செய்துள்ளன. வேற்றுக் கோளில் வாழும் அறிவுஜீவிகள் சுமார் 80 ஒளியாண்டுகள் என்ற தொலைவுக்குள் இருந்தால், அன்று நம்மிடமிருந்து சென்ற அந்த அலைகள், இப்போது அவர்களை சென்றடைந்திருக்கும். அவர்களால் இப்போது நம் ஒலிபரப்பை கேட்க முடியும். 'இப்போதுதான்' கேட்க முடியும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

நம்மிடமிருந்து சென்ற அலைகள், நாம் இந்த பூமியில் இருப்பதை அவர்களுக்கு அடையாளம் காட்டி கொடுக்கும். இங்கு அறிவுஜீவிகள் இருப்பதைப் புரிந்துகொண்டு அவர்கள் ரேடியோ அலைகள் மூலம் உடனே செய்தி அனுப்பினால் அது நம்மை வந்தடைய இன்னும் எண்பது வருடங்களாகும்.

அவர்கள் வாழும் கோள் ஒருக்கால் 200 ஒளியாண்டுகள் தொலைவில் இருந்தால் நம்மிடமிருந்து சென்ற கதிரலைகள் அவர்களைப் போய்ச்சேர இன்னும் 120 வருடங்களாகும். (ஏற்கனவே எண்பது ஆண்டுகள் அலைகள் பயணம் செய்தாயிற்று அல்லவா). அதை வாங்கிய பின் அவர்கள் நமக்குப் பதில் அனுப்பினால் அது நம்மை வந்து சேர மீண்டும் 200 ஆண்டுகளாகும்.

ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவில் இருந்தால் நமக்குப் பதில் வர சுமார் இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளாகும்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு நமக்கு, பிரபஞ்சத்திலிருந்து வரும் அலைகளை வாங்கி பதில் அனுப்பும் தொழில் நுட்பம் தெரியாது. அந்தக் காலத்தில் நமக்கு ஒரு செய்தி வந்திருந்தால் நாம் அதை தவறவிட்டிருக்கவும் வாய்ப்புண்டு.

நாற்பது ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள ஒரு கோளில் அறிவுஜீவிகள் இருக்கிறார்கள் எனக் கொள்வோம். நம்மிடமிருந்து எண்பது ஆண்டுகளுக்கு முன் சென்ற அலைகள் நாற்பது ஆண்டுகளுக்கு முன் அவர்களைச் சென்று அடைந்திருக்கும். அவர்கள் அதைக் கேட்டு பதில் அனுப்பியிருந்தால் நாற்பது ஆண்டுகள் பயணம் செய்து பூமிக்கு அது வந்து சேரும் நேரமாகி விட்டது. எப்போது வேண்டுமானாலும் செய்தி வரலாம்.

1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 ஆம் திகதி, ஆய்வுக்குழு, பிரபஞ்சத்தின் ஒரு திசையிலிருந்து ஒரு செய்தியைப் பெற்றது. 'வாவ்' (WOW) என்ற அந்த செய்தி சுமார் 70 நொடிகள் நீடித்தது. பரவசமடைந்த விஞ்ஞானிகள் அந்த செய்தி சுமார் 200 ஒளி ஆண்டுகள் தொலைவிலிருந்து வந்ததை அறிந்துகொண்டனர். உடனே பதில் கொடுத்தனர். உலகமெங்கும் பரபரப்பு நிலவியது. ஆனால் அந்த செய்தி தொடர்ந்து வராமல் நின்று விட்டது. அதற்கு நாம் கொடுத்த பதில் போய்ச் சேர 200 ஆண்டுகளாகுமே. அதற்குப் பிறகுதானே அவர்கள் நாம் இருப்பதை அறிந்துகொள்ள முடியும்.

- ஜெயச்சந்திரன்

# விசா மோசடிகள் குறித்து மக்களின் மனநிலை மாறவேண்டும்

## திசைகாட்டி குழுமத்தின் தலைவர்



விசா தொடர்பான நிறுவனங்கள் என்றாலே அது மோசடிகாரர்கள் என்ற மனநிலை எம்மவர்கள் மத்தியில் ஆழமாக பதிந்துள்ளது. இந்த கறை படிந்த பெயரை மாற்றி மக்கள் மனதில் நல்ல மதிப்பினை உருவாக்க அனைவரும் தீவிரமாக உழைக்கவேண்டும் என திசைகாட்டி குழுமத்தின் தலைவரும் பட்டயக் கணக்காளரும் தொழிலதிபருமான எஸ்.செல்வராஜா தெரிவித்தார்.

திசைகாட்டியின் சக நிறுவனமாகிய முத்துமணி காமன்ஸ் இன் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எமது பகுதியில் இளம் சந்ததியினர் தொழில் வாய்ப்பின்றி அல்லல் படுகின்றனர். இதனால் இவர்கள் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பினை எதிர்பார்த்துள்ளனர். இவர்களுக்கு சரியான ஆலோசனைகளை வழங்குவதற்காகவே எமது திசைகாட்டி விசா ஆலோசனை நிலையம் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. பொதுவாக விசா நிறுவனங்கள் பெற்றுக் கொண்டபணத்தினை மீளளிப்பதில்லை நாம் அதிலிருந்து மாறுபட்டு எமது வாடிக்கையாளர் ஒருவருக்கு அவர் கேட்டதற்கிணங்க அவர் செலுத்திய பத்து இலச்சத்து எண்பதாயிரம் ரூபாவை மீளளித்து விசா ஆலோசனை வரலாற்றை திருத்தி எழுதி உள்ளோம். என்று ஏம் பிக்கின்ற முத்துமணி காமன்ஸ் இல் பொருளாதார நிலையில் பின்தங்கிய பதினெட்டு யுவதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு உரிய பயிற்சியின் பின் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர். இவர்களுக்கான அனைத்து பயிற்சிகளும் யாழ்ப்பாணத்திலேயே வழங்கப்படும். தென்பகுதியில் இத்துறை சார்ந்தவர்கள் எதிர்கொள்கின்ற வேண்டத்தகாத இன்னல்கள் இங்கு அறவே இருக்காது பணியாளர்கள் அனைவர்க்கும் எமது பண்பாடு கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற வகையிலான சீருடை வழங்கப்படும் எமது ஆரம்ப உற்பத்தி உள்நாட்டு சந்தையை மையப்படுத்தி அமைவதுடன் தேர்ச்சியின் பின் வெளிநாட்டு சந்தை வாய்ப்பை எதிர்நோக்கியதாக அமையும் என்றார். (54)

# காணிப்பதிவு முறைகளில் மாற்றம்; ஜனவரி முதல் அமுலுக்கு வருகிறது

(யாழ்ப்பாணம்)

இலங்கை முழுவதும் நடைமுறையில் இருந்த காணிப்பதிவு அதிகார எல்லைகள் தற்போதைய இலகுவான பதிவு முறைக்கு மாற்றும் பொருட்டு புதிய முறையில் மீளமைப்பு செய்யப்பட்ட பிரதேச செயலக எல்லைகளாக மாற்றப்படவுள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் மேலதிக, பதிவாளர் நாயகம் ந.சதாசிவஜெயக் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பான தகவல் தருகையில், தற்போது கோறளை, பற்று எனப் பாரிய அளவில் [illegible]க்கப்பட்டிருந்த காணிப் பதிவுப் பிரிவுகள் 2013.01.01 முதல் பிரதேச செயலக பிரிவு அடிப்படையிலான பதிவுப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதற்கமைய பதியப்படவுள்ளன.

இம் முறையில் பதிவு செய்யும் நடவடிக்கையை சீராகச் செய்வதற்காக நொத்தாரிசு கட்டளைச் சட்டம், ஆவணப்பதிவுக் கட்டளைச் சட்டம் என்பவற்றில் 2012 யூன் மாதம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன் படி உறுதியொன்றை அத்தாட்சிப்படுத்தும் பிரசித்த நொத்தாரிசு ஆவண அட்டவணையில் வழமையான விபரங்களுக்கு மேலதிகமாக காணி அமைந்த பிரதேச செயலர் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு உள்ளூராட்சிப்பிரிவு வீதி, வரிமதிப் பிலக்கம் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.

புதிய பதிவு நடைமுறைக்கமைய 2013. 01.01 முதல் அத்தாட்சிப்படுத்தப்படும் உறுதிகளில் பிரதேச செயலர் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு உள்ளடக்கப்படாத அட்டவணைகளைக் கொண்ட உறுதிகள் நிராகரிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# சிவநகர் மைதானத்தில் நத்தார் நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியின் 66ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் நத்தார் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிவநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 66 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் தர்மசிறி, 661, 662 ஆவது படைப்பரிபிவுகளின் தளபதிகள், பங்குத்தந்தை, கிறிஸ்தவ மக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பல்வேறு நத்தார் கலை நிகழ்வுகள் நத்தார் கீதங்கள் என்பன இடம்பெற்றதுடன் உதவி பொருட்களும் இராணுவத்தால் மக்களுக்கு வழங்கப்பட்டது. (கே)

# பாடசாலைகளுக்கு இன்னிய வாத்தியக் கருவிகள்






(யாழ்ப்பாணம்)


நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் வித்தியாலயத்திற்கும், நெடுந்தீவு றோ.க. வித்தியாலயத்திற்கும் இன்னிய வாத்தியக் கருவிகளை ஈ.பி.டி.பி மாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) கையளித்துள்ளார்.

ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) இப்பாடசாலைகளுக்கு இவ்வாண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து வாத்திய கருவிகளை வழங்கிவைத்துள்ளார்.

அண்மையில் குறித்த பாடசாலை சமூகத்தினரிடம் இன்னிய வாத்தியக் கருவிகளை (பான்ட் வாத்தியம்) நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் வைபவரீதியாக கையளித்தார்.

இதன்போது நெடுந்தீவுப் பிரதேச செயலர் ஆ.சிறி, ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு பிரதேச இணைப்பாளரும் நெடுந்தீவு பிரதேசசபைத் தவிசாளருமான தானியேல் றெக்சியன் (ரஜீவ்) மற்றும் பாடசாலை சமூகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஆயுர்வேதம்



## குழந்தைகளுக்கு வரும் இருமல், பசியின்மை தீர..!

குழந்தைகளுக்கு அடிக்கடி சளியுடன் கூடிய இருமல், சில சமயம் வறட்டு இருமல், பசியின்மை, உடல் மெலிந்திருத்தல், வயிற்றோட்டம் போன்ற தொல்லைகள் ஏற்படுகின்றன.

தாளீஸபத்திரி 10 கிராம், மிளகு 20 கிராம், சுக்கு 30கிராம், திப்பிலி 40 கிராம், மூங்கிலுப்பு 50 கிராம், லவங்கப்பட்டை 5 கிராம், ஏலரிசி 5 கிராம், சீனி 320 கிராம். சீனி நீங்கலாக மற்றவற்றைத் தனியே இடித்து சூரணமாக்கிக் கொள்ளவும். சீனியை இடித்து மாவாக்கி அந்த சூரணத்துடன் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.

ஒரு கால் அல்லது அரை டீ ஸ்பூன், தினம் 2 - 4 வேளை உசிதப்படி தேன் அல்லது நெய்யுடன் கலந்தோ, காய்ச்சிய பாலுடனோ சாப்பிடலாம்.

இது சளியுடன் கூடிய இருமலுக்குச் சாப்பிடக் கூடிய சிறந்த மருந்தாகும். மார்பிலும் தலையிலும் சளி கோர்த்து வறட்டு இருமல் ஏற்படும்போது இதைச் சாப்பிட நீர்க்கோர்வை எளிதில் பழுத்து வெளியாகும். வறட்டிருமல் நிற்கும். இருமலால் ஏற்படும் விலா வலி, மார்பு வலி, தொண்டை வலி முதலியவையும் சுகமாகும். வெகு நேரம் சிரமத்துடன் இருமிச் சிறிது கபம் துப்பியதும் சிறிது நேரம் அடங்கும் இருமல், நா வறட்சி, தொண்டை உலர்ந்து போகுதல், கண், முகம் சிவத்தல் போனறவை இதனால் குணப்படும். சூட்டுடன் கூடிய இருமலானால் நெய்யில் குழைத்துச் சாப்பிடலாம். அல்லது காய்ச்சிய பாலுடன் சாப்பிடலாம். கபம் இறுகி ஏற்படும் இருமலில் தேனில குழைத்துச் சாப்பிடலாம்.

சிறுவர்களுக்கு ஏற்படும் உள்சூடு, பசியின்மை, உடல் இளைப்பு, மலம் இளகிப் போதல், உணவின் மீது வெறுப்பு போன்றவற்றுக்கு, இதைத் தொடர்ந்து தேன், நெய், அல்லது பாலில் கொடுத்து வர நல்ல பசி, ருசி, ஜீரண சக்தி ஏற்படும். இளைப்பு மாறி சுறுசுறுப்பும், புஷ்டியும் உண்டாகும். உணவு ஜீரணமாகி மலமும் இறுகிப் போகும்.


இதைச் செய்வதற்கு உங்களுக்குக் கஷ்டமாக இருந்தால் ஆயுர்வேத மருந்துக் கடைகளில் தாளீசாதி அல்லது தாளீச பத்ராதி சூரணம் என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. அதை வாங்கியும் பயன்படுத்தலாம்.

### உடல் நலம் காக்கும் உளுந்து

தோசை, இட்லி, வடை போன்றவை செய்யப் பயன்படும் உளுந்து, மனிதனுக்கு ஆரோக்கியத்தை நல்கும் அற்புதப் பொருளாகும்.

* உளுந்தைக் கஞ்சியாகவோ, களியாகவோ அல்லது அரிசி சேர்த்து அரைத்து வேக வைத்தோ உணவாக உண்டு வந்தால், உடல் வலுவடையும். எலும்பு, தசை நரம்புகளின் ஊட்டத்திற்கு உளுந்து மிகவும் நல்லது.
* உளுந்துடன் தவிடு நீக்காத பச்சரிசி, சுக்கு, வெந்தயம் சேர்த்து அரைத்துக் களி செய்து, பனங்கட்டியுடன் கலந்து சாப்பிட்டு வந்தால் உடல் சூடு தணியும்.
* உளுந்தைக் காய வைத்து அப்படியே அரைத்து அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் தாது விருத்தியாகும். நரம்புகளும் புத்துணர்வு பெறும்.
* உளுந்து சாப்பிட்டால் இடுப்பு வலிமையோடு திகழும்.
* பருவம் அடைந்த பெண்களுக்கும், நாற்பது வயதைக் கடந்த பெண்களுக்கும் ஊட்டச்சத்து அதிகம் நிறைந்த உளுந்தைக் கஞ்சியாகச் செய்து கொடுத்து வந்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.
* உளுந்தை நீரில் ஊற வைத்து எடுத்த நீரை, மறுநாள் அதிகாலையில் அருந்த சிறுநீரகம் சம்பந்தமான வியாதிகள் நீங்கும்.

# யுத்த முறைமைக்குள் செல்வோமானால் ஒட்டுமொத்த சமூகமுமே அழியும்



(கிளிநொச்சி)

கொடிய துன்பங்களை சுமந்ததன் பின்பே எம்மக்கள் அதிலிருந்து மீண்டிருக்கின்றனர் எனவே மீண்டும் அவ்வாறான முறைமைக்குள் எங்களை உட்படுத்தி விட முடியாது அவ்வாறு செல்வோமானால் ஒட்டுமொத்த சமூகமே அழிய வேண்டியேற்படுமென ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பூநகரி குமுழமுனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இளைஞர்பரிமாற்று வேலைத்திட்டத்தின் ஆரம்பநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரை யாற்றுகையில். இன்றைய எமது தேசத்திற்கு இன நல்லிணக்கம் என்பது அவசியமானதாக காணப்படுகின்றது. ஏனெனில் கடந்த கால இன முரண்பாடு காரணமாகவே நாம் இழப்புக்களையும் பேரழிவினையும் சந்தித்தோம் ஆனால் யுத்தத்திற்கு பின்னரான இக்காலப்பகுதியில் நாம் ஒரு புதிய யுகத்தை நோக்கி பயணிக்கவேண்டியது கட்டாயமானது நாம் ஒரு பாதிக்கப்பட்ட சமூகமாக இருப்பினும் ஒற்றுமைக்கூடாகவே எமது தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியும் என்பதனை நாம் உணர்ந்திருக்கின்றோம் என்றார்.

இந்நிகழ்வில் பூநகரிபிரதேச செயலக இளைஞர் சேவைகள் செயற்பாட்டு அதிகாரி. துசாந்த், பூநகரி பிரதேச சபைஉறுப்பினர்களான இராசலிங்கம் மற்றும் நோயல் ஆகியோரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி மாவட்ட அதிகாரி ஜெயவீரதென்னக்கோண், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கேகாலை மாவட்ட அதிகாரி சன்னஜெயவர்த்தன, கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தலைவர் சுதர்சன் ஆகியோரும் ஈ.பி.டி.பியின் பூநகரிபிரதேச இணைப்பாளர் நிர்மல றொபின்சன் குமுழமுனைக்கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் அந்தோணியப்பு மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வெரவெனிக்கா ஆகியோரும் கிளிநொச்சி கேகாலை மாவட்ட இளைஞர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



தும்பளை மேற்கு வரத விநாயகர் ஆலயத்தில் கலை கலாசார பண்பாட்டுக் குழுவினரின் ஏற்பாட்டில் இடம் பெற்ற பாரம்பரிய கலை வடிவங்களை வெளிப்படுத்தும் நிகழ்வில் பெண்களின் கும்மி நிகழ்வைக்காணலாம். (62)

## உள்ளூராட்சி வாரவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழா கடந்த திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் புலோலி பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் ஊ.சஞ்ஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (109)

## பரமர் சங்கமம்



"கடவுள் தூணிலும் இருப்பார்; துரும்பிலும் இருப்பார்" இவ்விதம் நம் மூதாதையர் சொல்லிப் போற்றினர். அதனில் எத்துணை அர்த்தம் பொருந்தி உள்ளது என்பதை ஆறமர இருந்து சிந்தித்தால் புரியும்.

விஞ்ஞான, அறிவியல் கண்டுபுடிப்புக்களை தற்கால விஞ்ஞானிகள் உற்பத்தி செய்து கொண்டிருந்தாலும், மூதாதையரான கொண்டிருந்தாலும், முதாதையரான மெஞ்ஞானிகளின் தீர்க்க தரிசன வார்த்தைகளுக்கு இவையெல்லாம் கிட்டநிக்க முடியாது.

கடவுள் தூணிலும், துரும்பிலும் இருக்கிறார் என்பதை புராண, இதிகாசக் கதைகள் சித்திரிப்பதை நூல்களிலும், சினிமா படங்களிலும் பாக்கிறோம்.

பிரகலாதன் கிருஷ்ண பரமாத்மா பக்தனாக வளர்ந்து கொண்டிருப்பதைப் புடிக்காத தந்தை இரணிய மன்னனுக்கும், மகனுக்கும் இடையே விவாதம் ஏற்படுகிறது.

அப்போது பிரகலாதன் சகல இடங்களிலும் கண்ணன் பிரசன்னமாக இருப்பாரென கூறுகிறான். எரிச்சலடைந்த இரணியன் தூணொன்றைக் காட்டி அதனிலும் உனது கடவுள் இருக்கிறாரா எனக் கேட்பான்.

ஆமென்றதும் தூணைக் கடாரத்தால் தாக்குவான். அதனில் இருந்து நரசிம்ம மூர்த்தியாக வெளிவரும் கிருஷ்ணர் இரணியனை துவம்சம் செய்து அழிப்பதாக இதிகாசம் போதிப்பதைத் திரைப்படங்களில் கண்டோம்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன' என்னும் கூற்றுக்கு எதிர்மாறாக ஒரு நூறு மதங்களும் ஒரு கோடி தேவர்களும் பூசிக்கப்பட்டும்; பின்பற்றப்பட்டும் வருவதைப் பரவலாகக் காண முடிகிறது.'

அதுவெல்லாம் கடவுள் எங்கும், எப்பொழுதும், எந்த வடிவிலும் இருக்கிறாரென்பதையே உணர்த்தி வருவதாக நம்பலாம். உலக நாடுகளெங்கும் கிறிஸ்தவம், சைவம், இஸ்லாம் போன்ற இன்னோரன்ன மதங்களும் - அம்மதங்கள் வழிபாட்டில் மையப்படுகின்ற தெய்வங்களும் ஒரே தெய்வத்தையே சுற்றிவட்டமிடுகின்றன.

ஔவைப்பாட்டி கோவில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்மென்ற கூற்றின்படி சகல நாடுகள், கண்டங்கள் அனைத்திலும் வழிபாட்டு மையங்கள் உருவாக்கப்பட்டு பேணப்பட்டும் வருகின்றன.

கோவில்களை தனியாக மனிதர் நிறுவியதன் அடிப்படை வாழ்விடமான வீடுகளில் இறைவனைத் தியானித்து வழிபட முடியாது பிள்ளைகள் வருகை தரும் விருந்தினர், குடும்பத்தார் செய்யும் சந்தடிகள் கெடுத்துவிடும்.

அப்படி நினைத்து கோவில்களை உருவாக்கிய மனிதனால் இப்பொழுதுதெல்லாம் வழிபட முடியாத அளவுக்கு ஆலயங்கள் கேழிக்கைகள் கூடிய இடமாக மாறி வந்துள்ளதைக் காண முடிந்துள்ளதல்லவா?

பரமர் இண்டைக்கென்ன கடவுள்களையும், மதங்கள் சார்ந்த போதனைகளையும் பேசுகிறார் என்பதால் மதவாதியாகவோ, மதம் சார்ந்த பிரசாரகராகவோ பார்க்கத் தேவையில்லை.

'எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள' என்பதைப் போல பரமர் வானத்தில் இருந்து குதித்து விடவில்லையே! இந்த மனித சமுதாயத்தில் தோன்றிய ஒருவராதலால் சமுதாயத்தில் இருக்கும் குட்டைகளில் ஊறிய மட்டைதான் இல்லையே பின்னை...

## சுனாமிப் பேரலை நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி உலகையே அதிரவைத்த சுனாமி ஆழிப்பேரலையின் நினைவு தினத்தையொட்டி இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பது எப்படி? எம்மைப்பாதுகாப்பது எப்படி? மீண்டும் எழுவது எப்படி? என்ற தலைப்பில் ஆய்வரங்கு இன்று காலை 9.00 மணிக்கு காங்கேசன்துறை வீதி துர்க்காபுரத்தில் அமைந்துள்ள கலைக்கூட சிற்பாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ் நிகழ்வில் பேராசிரியர் அருள் திரு.நீ.மரியசேவியர் தலைமையில் ஆரம்ப நிகழ்வும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் வழிபாடுகளும், சிற்பக் கலைஞர் எ.வி.ஆனந்தனின் சிற்பக் கண்காட்சியும், கலைஞர் கௌரவிப்பும் இடம் பெறவுள்ளன.

நிகழ்ச்சி அமைப்பிற்கு யாழ். திருமறைக்கலாமன்றம் தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் அனுசரனையில் இடம் பெறவுள்ளது. (27)

## கொட்டியம்பதி அம்மனுக்கு புதிய சித்திரத்தேர்

(ஆனைக்கோட்டை)

தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆதிமுத்து மாரியம்மன் ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் நீண்டகாலமாக சகடை உருவிலான தேரே வீதியுலா வந்தது. தற்போது இச்சகடை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தால் சிறிய சித்திரத்தேர் ஒன்றை அமைத்து அடுத்த வருடம் மஹோற்சவத்துக்கு இவ் ஆலய அம்பளை அதில் எழுந்தருளச் செய்வது என ஆலய தேர்த்திருப்பணிச்சபையினர் அறிவித்துள்ளனர். (104)

## முரசின் இன்றைய பலன்

(26.12.2012 – புதன்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 11 ஆம் திகதி. நட்சத்திரம் ரோகிணி. இராகுகாலம் 4.12 - 1.54 வரை. சுபநேரம் 4.05 - 6.27 வரை. சித்திரயோதசி பிற்பகல் 12.03 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வீண் பழியும் தொல்லையும் வரும். தொழிலில் தர்ம சங்கடம். போட்டி இருக்கும். முன்கோபம் தவிர்க்கவும். பணவரவு சுமார். குடும்ப ஒற்றுமை அவசியம். உடல் நலத்தில் கவனம். |
| ரிஷபம் | துயர மனநிலை. வெறுப்பை விட்டு விலகி வருக. பண வருகை தாமதம். வேலைச்சுமை. முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். புத்திரர் விரும்பியது வாங்குதல். நல்ல செய்தி வரும். |
| மிதுனம் | நண்பர்களிடம் மனக்குறை பகிர்வீர்கள். புதிய நம்பிக்கை. பணவரவு அதிகரிக்கும். தம்பதியர் அன்யோன்யம். கடன் தீரும். போக்குவரத்தில் கவனம். புத்திரரால் பெருமை. |
| கடகம் | அவசரப்பணி வந்து அல்லல் தரலாம். எதிர்ப்பை அன்பால் விலக்கவும். தொழிலில், சகபாழகளின் உதவி. அளவான பணவரவு. பாதுகாப்பில் கவனம். குடும்ப சச்சரவு. தியானம். |
| சிம்மம் | உடல் சோர்வினால் செயல்கள் தாமதம். அலுவலக வேலைபபளு. ஆரோக்கியத்திற்கு உணவில் கவனம். போக்குவரத்து அவதானம். நண்பர்கள் உதவி. எதிர்பார்த்த பணவரவு. |
| கன்னி | தாராள பணவரவு. குடும்பத்தினர் விருப்பம் நிறைவேற்றுவீர்கள். உடல் நலம் சீராகும். சக ஊழியர்களால் நிம்மதி. பிள்ளைகளால் பெருமை. ஒய்வும் இனிய கனவுகளும். |
| துலாம் | எதிர்காலம் குறித்த பயம் ஏற்படும். நிதான சிந்தனையால் தெளிவடைக. தொழில் நிலை சுமார். வரவை விட செலவு கூடும். இல்லறத்துணை உதவி. பழைய உறவு திடீர் வருகை. |
| விருச்சிகம் | இரக்கம், கருணைத்தன்மை. உதவி பெற்றவர் வாழ்த்துவர். தொழிலில் அனுகூலம். பணவரவு திருப்தி. தாயின் தேவை பூர்த்தி. பொறுமையால் அதிர்ஷ்டம் வரும். நிம்மதி. |
| தனுசு | விருந்தினர் வருகை. உற்சாகம். வாழ்க்கைத்துணை நற்செய்தி. புது வேலை. தொழில், இடையூறு விலகும். சராசரி பணவரவு. பாராட்டும் புகழும். அரச உதவி. வெளியூர் நற்செய்தி. |
| மகரம் | பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். பழைய நபர் சந்திப்பு. வீட்டில் திருத்தம். திறமைக்கு பாராட்டு. அதிக பணவரவு. அரச உதவி. குடும்பத்திலும் வெளியிலும் மதிப்பு. |
| கும்பம் | கூடுதல் உழைப்பால் எதிர்பார்த்த அனுகூலம். செலவுக்குத் தேவையான பணவரவு. எதிர்பாராத உதவி கிடைக்கும். உணவில் எச்சரிக்கை. உடல் நலத்திற்கு பிரார்த்தனை. |
| மீனம் | கணவன்–மனைவி வாக்குவாதம். நட்பு ஆதரவு. நஷ்டத்தைத் தவிர்க்க கூடுதல் உழைப்பு. உறவுகளை அனுசரித்துப் போகவும். பயணத்தில் கவனம். போராடி வெல்லும் நாள். |

ஒரு பெட்டியினுள் சிவப்பு நிறப்பேனாக்கள் 19 உம், கறுப்பு நிறப் பேனாக்கள் 28 உம், நீல நிறப்பேனாக்கள் 17 உம் இருந்தன.

24) சிவப்பு நிறப் பேனாக்களை விட, கறுப்பு நிறப்பேனாக்கள் எத்தனை கூடுதலாக உள்ளன?
1) 9 2) 11 3) 13

25) பெட்டியினுள் இருந்த மொத்தப் பேனாக்கள் எத்தனை?
1) 44 2) 59 3) 64

பின்வரும் கூற்றுக்களில் ஒரு கூற்று மாத்திரம் சரியானது. அக்கூற்றைத் தெரிவுசெய்க.

26) 1) 12 மணி நேரக் கடிகாரத்திலுள்ள நிமிட முள், ஒரு நாளில் 12 தடவைகள் சுற்றி வரும்
2) ஒரு மணித்தியாலத்தில் 60 செக்கன்கள் உண்டு.
3) ஒரு மீற்றரில் 100 சென்ரிமீற்றர்கள் உண்டு.

27) 1) பலா, மா, கொய்யா, அப்பிள் என்பன எமது நாட்டில் வளரும் பயிர்கள்.
2) எமக்கு உப்பு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.
3) வட்டம், சதுரம், முக்கோணி, செவ்வகம் என்பன தள வடிவங்களாகும்.

மூன்று அடைப்புக்களில் தரப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்தி விடையைக் கண்டுபிடியுங்கள்


| A | A | A |
|---|---|---|
| ☐ அப்பிள் | ☐ கத்தரி | ☐ உழுந்துவடை |
| ☐ பிட்டு | ☐ மாம்பழம் | ☐ பூக்கோவா |
| ☐ கோவா | ☐ முள்ளங்கி | ☐ பலாப்பழம் |
| ☐ பாற்சோறு | ☐ இடியப்பம் | ☐ அன்னாசிப்பழம் |

28) இரு உணவு வகைகளைக் கொண்ட அடைப்பு எது?
1) A 2) B 3) C

29) இரு பழ வகைகளைக் கொண்ட அடைப்பு எது?
1) A 2) B 3) C

உருவிலுள்ள பொருட்களுடன் தொடர்புபட்ட செயல்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்யுங்கள்

30) 1) வெட்டுதல் வரைதல், எழுதுதல்
2) எழுதுதல் வெட்டுதல் அணிதல்,
3) வெட்டுதல், எழுதுதல், அணிதல்





# தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை




# கல்வி முரசு

முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகள் இடையே தெரிந்தெடுத்து, அதன் கீழ் கோடிடுக.

முதல் உருவிற்குச் சமமான உருவைத் தெரிவு செய்க.

1)



2)



வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்யுங்கள்


3) அவன் ........................................ பார்க்கவே வந்தான்.
1) உலவு 2) உளவு 3) உழவு

4) அந்த ஊரிலுள்ள ........................................ யில் நீர் வற்றி விட்டது.
1) ஏறி 2) ஏரி 3) எரி


5) எனது அருகில் இருப்பவர் எனது அம்மா, ஆனால் நான் அவரின் மகன் அல்ல... என்றால் நான் யார்?
1) வளர்ப்பு மகன் 2) மகள் 3) பேரன்

OHP தாளில் வரையப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்றை வைக்கும் போது கிடைக்கும் உரு எது?

6)



7)





குமாரிடம் ஒரு தொகைப்பணம் உள்ளது. விமலிடம் குமாரை விட ரூபா 12 கூடுதலாக உள்ளது. இருவரிடம் உள்ள மொத்தப்பணம் ரூபா 172.00 ஆகும்.

8) குமாரிடம் இருந்த பணத்தொகை எவ்வளவு?
1) ரூபா 92 2) ரூபா 86 3) ரூபா 80

9) விமலிடம் உள்ள பணத்தொகை எவ்வளவு?
1) ரூபா 86 2) ரூபா 92 3) ரூபா 96

வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

10)


11)


12) 21 தொடக்கம் 25 வரை எண்ணும்போது, இலக்கம் இரண்டு எத்தனை தடவைகள் வரும்?
1) 4 2) 5 3) 6

13) 77 இல் எத்தனை ஏழு உள்ளது?
1) 2 2) 6 3) 11

14) கமலாவைவிட, அனுலாவின் நிறை 3 மடங்கு அதிகமாகும். இருவரினதும் மொத்த நிறை 32 கிலோகிராம் எனில், அனுலாவின் நிறை எவ்வளவு?
1) 8 Kg 2) 16 Kg 3) 24 Kg

பின்வரும் மூனக்று அடைப்புக்களினுள் தரப்படும் சொற்களில் ஒரு சொல் வேறுபட்டது. அச்சொல்லைக் கொண்ட அடைப்பைத் தெரிவு செய்யுங்கள்.

15)

| | | |
|---|---|---|
| ◆ வடை<br>◆ பிட்டு<br>◆ இடியப்பம்<br>◆ உணவு | ◆ நிலா<br>◆ அம்புலி<br>◆ சந்திரன்<br>◆ திங்கள் | ◆ ஆசிரியர்<br>◆ தபாற்காரன்<br>◆ தச்சன்<br>◆ சிற்பி |

16)

| | | |
|---|---|---|
| ◆ ஆடு<br>◆ மாடு<br>◆ எருமை<br>◆ குதிரை | ◆ கட்டில்<br>◆ கதிரை<br>◆ மேசை<br>◆ கண்ணாடி | ◆ தோழன்<br>◆ நண்பன்<br>◆ சிநேகிதன்<br>◆ பாங்கன் |

17) அருகில் தரப்பட்டுள்ள உருவைப் பயன்படுத்தி நேரம் எத்தனை மணியாக இருக்கலாம் எனக் கண்டுபிடியுங்கள்.



1) மு.ப 9.00 2) ந.ப. 12.00 3) பி.ப. 4.00




18) லவனின் சட்டைப் பையினுள் 7 நாணயக்குற்றிகள் இருந்தன. அவற்றின் கூட்டுத்தொகை ரூபா 22 எனில், பையினுள் இருந்த நாணயங்கள் எவை?

1) ரூபா 10 - 1, ரூபா 5 - 1, ரூபா 2 - 3, ரூபா 1 -2


2) ரூபா 10 - 1, ரூபா 5 - 2, ரூபா 2 - 3, ரூபா 1 -2

3) ரூபா 10 - 0, ரூபா 5 - 3, ரூபா 2 - 3, ரூபா 1 - 1


19) அரைவாசிக்கு நிழற்றப்பட்ட உரு எது?
1) 2) 3)



20) சதுரமுகி வடிவத்தை ஒத்த வடிவம் எது?
1) 2) 3)




21) அருகில் தரப்பட்டுள்ள உருவில் அமைக்கத் தேவையான செங்கற்கள் எத்தனை
1) 26 2) 27 3) 30




22)

அருகில் தரப்பட்டுள்ள உருவில் எத்தனை நாற்பக்கங்கள் உள்ளன?
1) 4 2) 5 3) 6

23) மூன்று வட்டம், இரண்டு சதுரங்கள், மூன்று முக்கோணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட உரு எது?
1) 2) 3)



# ரஷ்ய அதிபருக்கு எதிராக போராட்டம்
# கூடங்குளத்தில் உருவப் பொம்மை எரிப்பு



(புதுடில்லி)

கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு எதிராக இடிந்த கரையில் 497ஆவது நாளாக நேற்று போராட்டம் நடந்தது. இதன் ஒரு பகுதியாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இந்திய வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், புடினை திரும்பிச் செல்ல வலியுறுத்தியும் அவரது உருவ பொம்மையை எரித்து போராட்டம் நடத்தினர். அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தினர் இடிந்தகரை நுழைவுவாயில் அருகே இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து போராட்ட குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தெரிவிக்கையில், ரஷ்ய நாட்டுடன் மத்திய அரசு போட்டுள்ள அனைத்து ஒப்பந்தங்களும் காலதாமதம் ஆகிவருகின்றன. இதனால் இந்தியாவிற்கு பெரும் பொருள் இழப்பு ஏற்பட்டுள்ளது. கூடங்குளம் அணுமின் நிலையத்தை 2005 இல் செயல்படுத்துவதாக கூறினர். ஆனால் 2012ஆம் ஆண்டு ஆகியும் தொடங்கப்படவில்லை. எனவே புடின் திரும்பிப் போக வலியுறுத்தியும், கூடங்குளம் அணுமின் நிலையத்தை எடுத்து செல்ல வேண்டும் என்றும், ரஷ்ய தூதர் இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் பெரிதும் தலையிடுவதை கண்டித்தும் போராட்டம் நடத்தியுள்ளோம். அடுத்த கட்டமாக வருகிற 30, 31, 1ஆம் திகதிகளில் போராட்டம் நடத்துகிறோம் என்றார்.

### இந்தியச் செய்திகள்

# துணை முதல்வர் வீட்டில் சோதனை
# 2 கிலோ தங்கம், வெள்ளி சிக்கியது

(கர்நாடகம்)

கர்நாடக துணை முதல்வரும், மாநில பா.ஜ தலைவருமான கே.எஸ்.ஈஸ்வரப்பா, வீடு மற்றும் அலுவலகங்கள் உள்பட 7 இடங்களில் பொலிஸார் அதிரடி சோதனை நடத்தினர். வழக்கறிஞர் வினோத் என்பவர் ஷிமோகா நீதிமன்றத்தில் கொடுத்த புகார் மனுவில், மாநில துணைமுதல்வர் ஈஸ்வரப்பா, 2004 மற்றும் 2008இல் நடந்த பேரவை பொதுத்தேர்தலின் போது, கொடுத்துள்ள சொத்து பட்டியலுக்கும், தற்போது அவரிடம் உள்ளது சொத்துக்கும் அதிகம் வித்தியாசம் உள்ளது.

பா.ஜ ஆட்சி அதிகாரத்தில் இருப்பதை பயன்படுத்தி அதிகம் சொத்து சேர்த்துள்ளார். அவர் வாங்கியுள்ள சொத்துக்கள் பெரும்பாலும் நிலம் மற்றும் கட்டடமாகவுள்ளது. இதுகுறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கூறியிருந்தார். அதனடிப்படையில் பொலிஸார் விசாரணை செய்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



இந்நிலையில் நேற்று காலை ஷிமோகா மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் லிங்காரெட்டி தலைமையிலான 70 அதிகாரிகள் குழுவினர். பெங்களூர் வசந்தநகர், மல்லேஷ்வரம், ஷிமோகா நகரில் உள்ள ஈஸ்வரப்பா வீடு, இரண்டு இடங்களில் உள்ள அலுவலகம், ஈஸ்வரப்பாவின் தனி செயலாளர் சோமசேகர் வீடு, அவரின் உறவினர்கள் வீடுகளில் ஒரே சமயத்தில் சோதனை நடத்தினர். அப்போது 2 கிலோ தங்கம், 37 கிலோ வெள்ளி, 11 இலட்சம் ரூபாவும் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

# முதல்வரானார் வீரபத்ர சிங்

(புதுடில்லி)

ஹிமாச்சல் பிரதேசத்தில் காங்கிரஸ் வெற்றிபெற்றதன் மூலம் அக்கட்சியின் வீரபத்ர சிங்(வயது 78) நேற்று மாநில முதல்வராக பதவியேற்றார்.



ஏற்கனவே 5 முறை மாநிலத்தின் முதல்வராக இருந்திருக்கும் வீரபத்ரசிங்கிற்கு ஆளுநர் ஊர்மிளா சிங் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இவருடன் மேலும் சில அமைச்சர்களும் பதவியேற்றுக் கொண்டனர்.

சிம்லாவிலுள்ள வரலாற்று புகழ்மிக்க ரிட்ஜ் மைதானத்தில் பதவி ஏற்புவிழா பாதுகாப்புடன் நடைபெற்றது. 68 தொகுதிகளை கொண்ட ஹிமாச்சல் பிரதேச சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் 36 இடங்களை காங்கிரஸ் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்துள்ளது. 78 வயதான வீரபத்ரசிங், மக்களவை உறுப்பினராகவும் தேர்வுபெற்று மத்திய அமைச்சராகவும் இருந்தவர்.

இதனிடையே வீரபத்ர சிங் மீதான ஊழல் வழக்கை விசாரித்து வந்த சிம்லா சிறப்பு நீதிமன்றம், வழக்கில் இருந்து அவரை விடுவித்து தீர்ப்பளித்துள்ளது.

## போதைப்பொருளை கட்டுப்படுத்த இந்தியா - ரஷ்யா ஒப்பந்தம்



ஆப்கானிஸ்தானில் போதைப பொருள் நடமாட்டத்தை ரஷ்யாவுடன் சேர்ந்து இந்தியா கட்டுப்படுத்தவுள்ளது. இந்தியா - ரஷ்யா இடையே 10 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்தியா வந்துள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்-பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில், இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. சுகோய் விமானத்தை உருவாக்குவதில் நேரடி முதலீடு, ஆப்கானிஸ்தானில் போதைப் பொருள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் இருநாடுகளும் கூட்டாக இணைந்து செயல்படுவது உள்ளிட்ட 10 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.


# அரசியல் சாசனத்தை திருத்த கோரி
# ஆலய நுழைவுப் போராட்டம்

(சென்னை)

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் வகையில் அரசியல் சாசனத்தை திருத்த வலியுறுத்தி, சென்னை மயிலை கபாலீஸ்வரர் கோயிலில் ஆலய நுழைவுப் போராட்டத்தை நடத்த முயன்ற தந்தை பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

தீண்டாமை ஒழிக்கப்பட்டது என்பதற்கு பதிலாக, சாதி ஒழிக்கப்பட்டது என்று திருத்தம் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த போராட்டத்தில் பங்கேற்ற தந்தை பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த கோவை ராமகிருஷ்ணன் மற்றும ஆனூர் ஜெகதீசன், சட்டத்தரணி துரைசாமி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர். இந்த போராட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கபாலீஸ்வரர் கோயிலில் இந்து அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமானோர் குவிந்திருந்தனர்.



கடவுள் மறுப்பாளர்களுக்கு கருவறையில் என்ன வேலை என்றும் அவர்கள் முழக்கமிட்டனர்.

இருதரப்பினரின் போராட்டத்தை முன்னிட்டு கபாலீஸ்வரர் கோயிலில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

# மாணவர் போராட்டத்தின் எதிரொலி
# மூடப்பட்டது இந்தியா கேட்



மாணவி பலாத்கார சம்பவத்தை கண்டித்து நடைபெறும் போராட்டத்தை கட்டுப்படுத்த டில்லி இந்தியா கேட் பகுதியில் அனைதது வீதிகளும் மூடப்பட்டு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. அருகேயுள்ள 9 மெட்ரோ ரயில் நிலையங்களும் மூடப்பட்டதால் பொது மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாயினர். பேருநதில் மாணவி பலாத்காரம் செய்யப்பட்டதை கண்டித்து, டில்லியில் கடந்த ஒரு வாரமாக மாணவ, மாணவிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தியா கேட் பகுதியில் ஞாயிரன்று ஆயிரக்கணக்கானோர் கூடி கோஷம் எழுப்பினர். வாகனங்களை சேதபடுத்தினர். இதனால் இந்தியா கேட் பகுதியில் பதற்றம் அதிகரித்தது.

ரஷ்ய அதிபர் புடின் வருகையையொட்டி, டில்லியில் நேற்றுமுன்தினம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தியா கேட் பகுதியில் கூட்டத்தை குறைக்கும் வகையில் ராஜீவ் ரயில் நிலையம் உட்பட டில்லியின் 9 மெட்ரோ ரயில் நிலையங்கள் மூடப்பட்டன. சாலைகளில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். இந்தியா கேட் பகுதியிலிருந்து ரெசினா ஹிலஸ பகுதி வரை அனைத்து வீதிகளும் மூடப்பட்டன.

மாணவி பலாத்கார சம்பவத்துக்கு நீதி கேட்டு டில்லியில் மாணவர் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. டில்லியில் ஓடும் பேருந்தில் மாணவி பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம் இந்தியா கேட் பகுதியில் டில்லி முதல்வர் ஷீலா தீட்சித்தின் மகனும் எம்.பி.யுமான சந்தீப் தீட்சித் சென்ற காரை ஆர்ப்பாட்டக்காரர்கள் அடித்து நொறுக்கினர். பொலிஸ் வாகனத்துக்கும் தீவைக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாணவி சிகிச்சை பெற்று வரும் சப்தர் ஜங் மருத்துவமனை அருகிலும் மாணவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ரஷ்ய அதிபர் புடின் டில்லி வந்துள்ள நிலையில், மாணவர் போராட்டத்தால் பதற்றம் நிலவுகிறது. டில்லியில் பிர தமர் அலுவலகம் உட்பட முக் கிய பகுதிகளில் பொலிஸ் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.





## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# புதிய அரசியலுரிமை சட்டம் வேண்டும் பிரான்ஸில் தலிபான்கள் கோரிக்கை



பிரான்ஸில் தலிபான்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில், தங்களுக்கு புதிய அரசியலுரிமை சட்டம் வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரான்ஸில் தலிபான்களுக்கும், ஆப்கானிஸ்தான் அரச அதிகாரிகளுக்கும் இடையே சமாதான பேச்சுவார்த்தை நடந்தது.

இக்கூட்டத்தில் தலிபான்களின் மூத்த தலைவர்களான ஹாபுதீன் திலா மற்றும் நயீம் வர்தாக்கும் கலந்து கொண்டனர்.

அப்போது பேசுகையில், தற்போதுள்ள ஆப்கானிஸ்தானின் அரசியலுரிமைச் சட்டத்தில் தங்களுக்கு எந்தவொரு மதிப்பும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தனர்.

மேலும் இஸ்லாம் என்னும் புதிய சமயம், தேசிய அக்கறை, வரலாற்றுச் சாதனை மற்றும் சமூக நீதி ஆகியவற்றின் அடிப்படையில் புதிதாக சட்டமொன்று உருவாக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அமெரிக்க இராணுவ ஆலோசகர் ஆப்கானிஸ்தானில் சுட்டுக்கொலை



ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவ ஆலோசகரை பெண் பொலிஸ் அதிகாரியொருவர் சுட்டுக்கொன்றார்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள பொலிஸ் தலைமை அலுவலகத்திற்கு, அமெரிக்கா இராணுவத்தை சேர்ந்த ஆலோசகர் ஒருவர் சென்றார்.

அப்போது அங்கு நின்ற பெண் பொலிஸ் அதிகாரி திடீரென துப்பாக்கியால் சுட்டதில், இராணுவ ஆலோசகர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதை ஆப்கானிலுள்ள நேட்டோ படை செய்தி தொடர்பாளர் உறுதி செய்துள்ளார். ஆனால் மரணமடைந்த ஆலோசகரின் பெயர் விவரத்தை வெளியிடவில்லை.

இச்சம்பவம் பற்றி உயர் பொலிஸ் அதிகாரி கூறுகையில், பலத்த பாதுகாப்புடன் தான் இராணுவ ஆலோசர் பொலிஸ் அலுவலகத்துக்கு வந்தார். அப்போது அவர் அருகில் சென்ற பெண் பொலிஸ் திடீரென கைத்துப்பாக்கியால் சுட்டு விட்டார் எனக்கூறினார்.

வெளிநாட்டு படை வீரரை ஆப்கானிஸ்தானை சேர்ந்த பெண் பொலிஸ் சுட்டுக் கொன்றிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இதனையடுத்து குறித்த பெண்ணை கைது செய்து, பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உணவின்றி குளிரில் சிரியா அகதிகள்; துருக்கி எல்லைப் பகுதியில் அவலம்



சிரியாவில் முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் உணவின்றி தவிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.


சிரியாவில் உள்நாட்டு போர் தீவிரமடைந்து வரும் நிலையில், சிரியா- துருக்கி எல்லைப் பகுதியில் லட்சக்கணக்கான அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு உணவு, குளிரை தாங்கவல்ல ஆடைகள், கழிப்பிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கூட இல்லாத சூழல் நிலவுகிறது. பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் குழந்தைகள், பெண்கள் என அனைவரும் தங்கியுள்ளனர்.

குளிரின் காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் சிக்கல் நிலவுகிறது.

மேலும் வெப்பத்தை ஏற்படுத்தவோ, சமைக்கவோ எரிபொருள்களும் இல்லாத நிலையில், முகாமில் போதிய அளவில் உணவு வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

# எரிமலை வெடிக்கும் அபாயம்; சூர்நோக்கு மையம் எச்சரிக்கை



தென் அமெரிக்காவில் சிலி மற்றும் அர்ஜெண்டினா நாடுகளின் எல்லைப்பகுதியில் உள்ள ஆண்டெஸ் மலையில் கேஸ் பாஹு" என்ற எரிமலை வெடிக்கக்கூடும் என்று எச்சரிக்கை விடபட்டுள்ளது.

சிலி நாட்டின் நிலவியல் மற்றும் கனிமத்துறை வெளியிட்ட அறிக்கையில் இந்த எரிமலையினால் ஆட்களை வெளியேற்றும் கருத்து எதுவும் இப்போதைக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

சாதாரணமாக இருப்பதை விடக் கூடுதலாக கரும்புகையும் சாம்பலும் 1.5 கி.மீ. தூரத்துக்கு வெளியேறுவதால், எரிமலை வெடிக்கும் அபாயம் இருப்பதாக, தெற்கு ஆண்டெஸ் மலையின் எரிமலை சூர்நோக்கு மையம் தெரிவித்தது.

கடல் மட்டத்துக்கு மேலே மூவாயிரம் மீட்டர் உயரத்தில் இருக்கும் இந்த மலையில் வரிசையாக ஒன்பது எரிமலைவாய்கள் அமைந்துள்ளன.

கோப்பு"ஹ என்றழைக்கப்படும் இந்த எரிமலை 500,000 ஆண்டுகள் பழமையானது.

18ஆம் நூற்றாண்டு முதல் சாதாரண மற்றும் மிகச் சாதாரண எரிமலைகள் வெடிப்பு இந்த மலையில் நிகழ்ந்துள்ளது.


இதனால் பரவிய கந்தகத் துகள்கள் நிறைந்த நீர் முந்நூறு மீற்றர்' பரப்பிற்கு ஏரி போல நிரம்பியுள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டிற்குப் பின்பு மூன்று முறை எரிமலை வெடித்துள்ளது.

கடைசியாக 2000ஆவது ஆண்டில் யூலை மற்றும் அக்ரோபர் வரை எரிமலை வெடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வாழ்ந்த மக்கள் அவ்விடத்தை விட்டு வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# விண்வெளிக்கு சுற்றுலா விண்கலம்; அமெரிக்காவின் சோதனை வெற்றி



விண்வெளிக்கு சுற்றுலா செல்லும் விசேட விண்கலத்தின் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ரிச்சர்ட் பிரான்சன் விமான நிறுவனம், மக்களை விண்வெளிக்கு சுற்றுலா அழைத்து செல்வதாக அறிவித்து இருந்தது.


இதற்கான கட்டணம் தலா ரூ.1 கோடியே 10 இலட்சம் என்றும் நிர்ணயித்தது. இதனையடுத்து ஏராளமானவர்கள் முன்பதிவு செய்தனர்.

இதனையடுத்து புதிய விசேட விண்லகம் தயாரிக்கப்பட்டது. அதிவேக சக்தி கொண்ட இந்த விண்கலத்தில் 2 விமானிகள் உட்பட 6 பயணிகள் என மொத்தம் 8 பேர் பயணம் செய்ய முடியும்.

இந்நிலையில் தற்போது இந்த விண்கலத்தின் சோதனை ஓட்டம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள மொஜாவ் விண்வெளி மையத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இத்தகவலை அந்நிறுவனத்தின் தலைமை அதிகாரி ஜார்ஜ் ஒயிட்சைட்ஸ் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் விண்வெளி சாகசம் விண்கல்லை நகர்த்த நாசா திட்டம்



விண்வெளியில் உள்ள 5 இலட்சம் கிலோ எடையுள்ள விண்கல்லை சிறிது நகர்த்தி அமைக்க அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா திட்டமிட்டுள்ளது.

பூமிக்கும், நிலவுக்கும் நடுவே இந்த பிரமாண்டமான விண்கல் அமைந்துள்ளது.

அட்லஸ் வி ராக்கெட் மூலம் அந்த விண்கல்லைச் சுற்றி உறை அமைக்கப்பட்டு, அது இயல்பான இடத்தில் இருந்து சிறிது நகர்த்தப்படும்.

நாசாவின் இந்த முயற்சி வெற்றியடைந்தால், அங்குள்ள உலோகங்கள், தாதுப் பொருள்கள் உள்ளிட்டவற்றை பூமிக்கு எடுத்துவர வாய்ப்புண்டு.

மேலும் செவ்வாய்க் கிரகத்துக்கு பயணம் செல்லும் விண்வெளி வீரர்கள், தங்கள் ஓடத்தில் எரிபொருள்களை நிரப்புவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள விண்வெளி மையமாகவும் இதனைப் பயன்படுத்த முடியும்.

எனினும் இந்த தொழில்நுட்பம் முழுமையாக வெற்றியடைய 10 முதல் 12 ஆண்டுகள் வரை ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



பஹ்ரைன் நாட்டின் ஷெகிர் நகரில் துவங்கியுள்ள வளைகுடா நாடுகளின் மாநாட்டில் கத்தார், குவைத், பஹ்ரைன் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

# வரவு-செலவுத் திட்டம் தோற்கடிப்பு
# பிரதேச சபைக்குப் பெரும் பின்னடைவு

### கூட்டமைப்பு நிர்வாகத்தில் குழப்பம்

ஆலையடிவேம்பு பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை சபையின் அமர்வில் தவிசாளரால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டத்திற்கு ஆளுங்கட்சி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் 4 பேர எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்புச் செய்து வரவு - செலவுத திட்டத்தை தோற்கடித்துள்ளனர்.

இப் பிரதேச சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி ஆட்சி அமைத்து செயற்பட்டு வருகின்ற நிலையில் சபையின் மாதாந்த அமர்வு நேற்று திங்கட்கிழமை பிரதேச பொதுநூலக கேட்போர் கூடத்தில் தவிசாளர் க.இரத்தினவேல் தலைமையில் நடைபெற்றது.

சபையமர்வில் தவிசாளர், உபதவிசாளர் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்களும் எதிர்கட்சி உறுப்பினர்களுமாக 9 உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இதன்போது தவிசாளரால் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக சபை உறுப்பினர்கள் விவாதத்தில் ஈடுபட்ட நிலையில் பிரதேசத்தில் உள்ள இரு மதுபானசாலைகளையும் அகற்றவேண்டும் என சகல உறுப்பினர்களும் தீர்மானம எடுத்துள்ளதுடன் இது தொடர்பாக மதுவரி திணைக்களம் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு கடிதம் அனுப்புவதாகவும் வேறு மதுபானசாலைகளும் இனி அமைப்பதற்கு அனுமதி வழங்கக் கூடாது எனவும் ஏக மனதாக தீர்மானித்தனர்.

பிரதேசத்தில் வீதிகள் அமைப்பது மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாக பல வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றது. சபை ஆரம்பிக்கப்பட்டு 21 சபை அமர்வுகள் இடம்பெற்றுவரும் நிலையில் இது வரை நடைபெற்ற சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எவையும் சரியான முறையில் செயற்படுத்தப்பட வில்லை என குற்றம் சுமத்தப்பட்டது.

சபையின் நிதிக்குழு, அபிவிருத்திக்குழு என்பவற்றின் அங்கீகாரம் இன்றியும் பத்தாயிரம் ரூபாவுக்குமேல் பிரதேசத்தின் அபிவிருத்திக்கே அல்லது ஏனைய நடவடிக்கைகளுக்கோ செலவு செய்வதாயின் சபையின் அங்கீகாரம் எடுக்கப்பட வேண்டும்.

இருந்தும் தவிசாளர் சபையின் அங்கீகாரம் இன்றி தன்னிச்சையாக செயற்பட்டு செலவு செய்வதாக தவிசாளருக்கு எதிராக உப தவிசாளர் சி.சியாம் சுந்தர், உறுப்பினர் காளிதாசன், மற்றும் எதிக்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் ரகுபதி, சந்திரகுமார் ஆகிய நான்கு உறுப்பினர்களும் எதிராக குற்றம் சுமத்தி சபையில் இருந்து வெளிநடப்புச் செய்து முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடித்தனர்.

இதனையடுத்து இவ்வரவு செலவுத் - திட்டம் நிறைவேற்றுவதற்கான சபை அமர்வு எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை நடத்த ஏனைய சபை உறுப்பிர்களால் தீர்மானிக்கப்பட்டு சபை அமர்வுகள் நிறைவடைந்தது.

# பொலிஸார் மீது சூடு சுட்டவர் தற்கொலை

### தெற்கில் பரபரப்பு

விசாரணைக்குச் சென்ற பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சந்தேகநபர் ஒருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவமொன்று சிறிபுர, முதுன்கம கிராமத்தில் இடம்பெற்றுள்ளது. இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர் என்று கூறப்படும் மேற்படி சந்தேகநபர், பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்று அடையாளம் காணப்பட்ட நிலையிலேயே பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்துவதற்காக அவரது வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், தன்னிடம் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியினால் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ள சந்தேகநபர், பின்னர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார் என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெஹியத் தகண்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அனர்த்தங்களில் சிக்கி 271 பேர் மருத்துவமனையில்

நாடு முழுவதும் கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கு மற்றும் திடீர் அனர்த்தங்கள் காரணமாக 271 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய மருத்துவமனை தெரிவித்துள்ளது. இந்தத் தகவலை கொழும்பு தேசிய மருத்துவமனை பயிற்சி பிரிவின் பிரதான மருத்துவ தாதி புஸ்பா ரம்யானி த சொய்சா வெளியிட்டுள்ளார்.

இதனிடையே, கடந்த 24 மணித்தியாலங்களில் 100 இற்கு 3 சதவீத திடீர் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில் திடீர் விபத்துக்கள் காரணமாக இரண்டு பேர் பலியாகினர். இது தவிர, பட்டாசு விபத்து காரணமாக ஒருவர் மாத்திரமே காயமடைந்துள்ளதாகவும் கொழும்பு தேசிய மருத்துவமனை பயிற்சி பிரிவின் பிரதான மருத்துவ தாதி புஸ்பா ரம்யானி த சொய்சா தெரிவித்துள்ளார்.

## வடக்கில்...

பற்றாக்குறையை நிவர்த்தி செய்து பாடசாலைகள் தோறும் ஆரம்பப்பிரிவுகளில் ஆங்கிலப் பாடத்திட்டத்தை இணைத்துக் கொள்வதுடன் சில பாடசாலைகளில் காணப்படும் மலசலகூடம், மைதானம் உள்ளிட்ட பௌதீக வள தேவைகளுக்கு உரிய வகையில் தீர்வு காண்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் நகர்ப்புறப் பாடசாலைகளின் மேம்பாட்டில் கவனம் செலுத்தப்படும் அதேவேளை கிராமப்புற பாடசாலைகளது மேம்பாடு தொடர்பிலும் துறைசார்ந்தவர்கள் அக்கறை செலுத்த வேண்டும் என்பதில் கவனம் செலுத்திய அமைச்சர், ஆசிரியர்களது இடமமாற்றம் மற்றும் 2013 ஆம் ஆண்டில் தரம் ஒன்றுக்கான அனுமதி தொடர்பாகவும் துறைசார்ந்தவர்களிடம் கேட்டறிந்து கொண்டதுடன் குறித்த விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை முன்னெடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் மாவட்டத்தில் தற்போது காணப்படும் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், உடற்கல்வி போன்ற பாடங்களுக்கு புதிய நியமனங்களை உள்வாங்குவது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் என்பதுடன் ஆங்கிலம் மற்றும் உடற்கல்வி ஆகிய பாடங்கள் தொடர்பாக மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டுமெனவும், இடமாற்றம் போன்ற விடயங்களில் சமூக விழுமியத்திற்கு பங்கம் ஏற்படாமலும் துறைசார்ந்தவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

இதனிடையே கல்வி அபிவிருத்தி மேம்பாடு தொடர்பில் எதிர்காலங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய பல்வேறு செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், பிரதிச் செயலாளர் விக்னேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வராஜா, மாகாண கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் இரா.செல்வவடிவேல், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

## முறிகண்டியில்...

அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு விபத்தில் சிக்கிய சுற்றுலாப் பயணிகளின் வாகனத்தில் பயணித்த வெளிநாட்டுப் பெண் பிரஜையான எஸ்.டி ரான்டேகே (வயது-61) என்பவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்றுப் பிற்பகல் மாற்றப்பட்டு அங்கு சிகிச்சைக்கு அனுதிக்கப்பட்டிருந்தார். இவரது ஒருகால் முழங்காலுக்குக் கீழ் முறிவடைந்த நிலையிலேயே அவர் சிகிச்சைபெற்று வருகின்றார் என்று யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த சுற்றுலாப் பயணி யாழ். கிறீன்கிராஸ் விடுதியில் தங்கியிருந்தவர் எனவும் தெரிய வருகின்றது. (பா)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். மாநகர சபை உதவி

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் நாட்டில் பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் வடக்கிலும் கிழக்கிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். மாநகர சபை உதவி வழங்கவுள்ளது.

நேற்று யாழ். மாநகரசபையின் டிசம்பர் மாதத்திற்கான மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு உதவி வழங்க சபை தீர்மானித்துள்ளது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் வடக்கிற்கும் கிழக்கிற்கும் தலா ஒவ்வொரு இலட்சம் ரூபா நிதி வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தத் திட்டத்திற்குத் தலைமை வகித்த யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா இந்த நிதி உதவி குறித்த பிரேரணையைச் சபையில் முன்வைத்ததைத் தொடர்ந்து அதனை சபை ஒருமனதாக ஏற்றுக்கொண்டது.

அத்துடன் யாழ். குடாநாட்டிலும் இந்த வெளிமாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்கள் போன்று ஏற்பட்டால் அதற்கும் மாநகரசபை உதவ வேணடும் என்றும் இந்தப் பிரேரணை குறித்து கருத்துத் தெரிவித்த ஆளும்கட்சி உறுப்பினர் எஸ்.விஜயகாந் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# பெண் ஊடகவியலாளர் விபத்தில் சிக்கி மரணம்

கொழும்பு - ரொஸ்மிட் பிளேஸ் மியூசியஸ் வித்தியாலயத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற வாகன விபத்தில் செய்தித்தாள் ஒன்றின் பெண் ஊடகவியலாளர் ஒருவர் பலியானார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

நடை பாதையில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த பெண் ஊடகவியலாளர் பாரவூர்தி ஒன்றில் சிக்குண்டு காயமடைந்திருந்தார். இதனையடுத்து, கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், மரணமானதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலம் குறிப்பிட்டுள்ளது.

பாரவூர்தி ஒன்றை திருப்ப முற்பட்ட போது வேகத்தை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. சம்பவத்தில் 22 வயதான அமிலா மென்டிஸ் ஜயசிங்க என்ற இளம்பெண் ஊடகவியலாளரே மரணமானவராவார்.

# ஆழிப்பேரலை நினைவு தேசிய நிகழ்வு பதுளையில்

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்திற்கு ஒத்ததான தேசிய பாதுகாப்பு தின நிகழ்வுகள் இந்த முறை பதுளையில் இடம்பெறவுள்ளன. இன்று காலை இது தொடர்பான நிகழ்வுகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது மரணமானவர்களுக்கு 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. முற்பகல் 9.25 மணிமுதல் 9.27 மணிவரையான காலப்பகுதியில் சகலரும் இதற்காக ஒத்துழைப்பு வழங்குமாறும் அமைச்சர் கோரியுள்ளார். இதனிடையே, அம்பாறைப் பிரதேசத்தில் தற்காலிகமாக பொருத்தி வைக்கப்பட்டிருந்த புவியியல் அளவுக் கருவிகள் மூன்றில் இரண்டை அகற்ற புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க அகழ்வு பிரிவு தீர்மானித்துள்ளது.

அம்பாறைப் பகுதியில் நில அதிர்வுகள் உணரப்பட்டதால் கிழக்கு மாகாணத்தின் மூன்று பிரதேசங்களில் புவியியல் அளவுக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. அம்பாறை, வடினாகல, தேவாலஹித ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியான நில அதிர்வு உணரப்பட்டதை அடுத்து பொதுமக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது. இருந்தபோதும், கடந்த 15 ஆம் திகதியின் பின்னர் இதுவரை அங்கு எந்தவித நில அதிர்வுகளும் உணரப்படாததால் அளவைக் கருவிகள் அகற்றப்படவுள்ளன. அம்பாறையில் நில அதிர்வு உணரப்பட்டமை குறித்து எதிர்வரும் ஜனவரி மாதம் ஆய்வு ஆரம்பிக்கப்படும் என புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க அகழ்வு பிரிவு தெரிவித்துள்ளது.

## உற்சாகமாக...

கொளுத்தியும், வாணவேடிக்கை நிகழ்வுகளிலும் மக்கள் ஈடுபட்டிருந்தனர். இதன் காரணமாக யாழ். நகரின் பல பகுதிகளும் வெறிச்சோடிக் காணப்பட்டது. ஆங்காங்கே கடைகள் திறந்திருந்தது. வியாபார நடவடிக்கைகளும் நடைபெற்றது. கிறிஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகையை ஒட்டி உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று நத்தார் நிகழ்விலும் கலந்துகொண்டனர். (பா)

## குருநகரில்...

சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் குருநகர் பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலய மொன்றுக்கு அரு காமையில் குடிபோதையில் இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலை தவிர்க்கச் சென்றபோது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலை நடத்திய மீனவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## போதைப்பொருள்...

தெரிவிக்கப்படுகிறது. கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலே ஹெரோயின் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இலங்கையிலிருந்து கடல் வழியாக போதைப் பொருள் கடத்தும் திட்டத்தை தடுக்கும் நோக்கில் கடற்படையின ரால் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாக கடற் படையினர் தெரிவித்துள்ளனர்.

# தரிப்பிடம் தெரியாத பஸ் சாரதிகள் பயணிகள் பெரும் திண்டாட்டம்

(கிளிநொச்சி)

யாழ். கண்டி வீதியிலிருந்த பஸ் நிலையங்கள் பல, வீதி விஸ்தரிப்புப் பணிக்காக அழிக்கப்பட்டுள்ளதால் தூர இடத்து பஸ்களில் வருவோர் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பஸ் சாரதிகள் உரிய இடத்தைச் சரியாக இனங்கண்டு கொள்ளாததால் சற்றுத் தூரத்தில் பயணிகளை இறக்குவதால் மிகவும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் முதியோர், கர்ப்பிணிப் பெண்கள், நோயாளிகள், குழந்தைகள் போன்றோர் பலத்த சிரமங்களை நாளாந்தம் சந்திக்கின்றனர்.

60, 70 ரூபா கொடுத்து வந்த பஸ் பயணத்தில் தமக்குத் தேவையான இடத்தை அடைய நூறு நூற்றைம்பது ரூபா கொடுத்து ஆட்டோக்களைப் பிடிக்கும் நிலை ஏற்புடுவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

அது கொடுக்க இயலாதவர்கள் உடல் வருத்தத்துடன் நடக்க வேண்டியுள்ளது. மழை வெய்யில் நேரங்களில் பஸ்ஸுக்கு காத்திருப்போர் அவதியும்பட நேரிடுகிறது. தூர பயண பஸ் சாரதிகளுக்கு இடம் தெரியாதது மட்டுமல்ல, உள்ளூர் பொது மக்கள் கூறும் மொழி தெரியாமையாலும் இந்தச் சங்கடம் ஏற்படுகிறது.

யாழ். கண்டி வீதி விஸ்தரிப்பு பணிகள் நிறைவுறும் நிலையை எட்டிய போதும் அழிக்கப்பட்ட பஸ் நிலையங்களுக்கான புதிய பஸ் நிலையங்களை அமைக்கும் வேலைகள் எதுவும் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. வீதி நிர்மாணப் பணிகளில் மதிப்பீடு மேற்கொள்ளும்போது உடைக்கப்படும் மதில்கள் கட்டடங்கள் திருத்துவதற்கும் சேர்த்து மதிப்பீடு செய்யப்பட்டது.

அதற்குரிய நிதியைக் கொண்டு கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டது. அது போல பஸ் தரிப்பு நிலையங்களை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் நூற்றுக்கணக்கான பஸ்கள் பயணிக்கும் இப்பாதை எங்கும் அழிக்கப்பட்ட பஸ் நிலையங்களை மீள நிறுவ வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இது தொடர்பாக உரிய கவனம் செலுத்த வேண்டுமெனவும்கூறப்படுகின்றது. (90)

# ரயிலில் மோதுண்டு இளைஞன் மரணம்

(கொழும்பு)

வாத்துவ, தல்பிட்டிய பகுதியினூடாகப் பயணித்துக்கொண்டிருந்த 'காலி குமாரி' கரையோர ரயிலில் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ரயிலில் மோதுண்ட மேற்படி இளைஞனின் உடல், இரண்டு பகுதிகளாக வேறுபட்டதாகவும் அதில் ஒரு பகுதி, பாலத்திலிருந்து கீழே விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில், திவுலபிட்டிய பகுதியைச் சேர்ந்த இளைஞரே உயிரிழந்தவராவார். இது தொடர்பான விசாரணைகளை வாத்துவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இயற்கையின் சீற்றம்; 100 குளங்கள் பாதிப்பு

(கொழும்பு)

வெள்ளப்பெருக்கு காரணமாக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் வயல்கள் சேதமடைந்துள்ளதாக பிரதியமைச்சர் எஸ்.எம். சந்ரசேன தெரிவித்துள்ளார். நீர் பெருக்கெடுத்ததன் காரணமாக 100 சிறிய மற்றும் நடுத்தர குளங்கள் சேதமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயிர் செய்கைகளுக்காக விநியோகிக்கப்பட்ட நிவாரண உரம் சேதமடைந்திருந்தால் அதற்காக இலவசமாக உரம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதுதவிர, பயிர் செய்கையினை மீண்டும் மேற்கொள்வதற்காக முட்டை நெல் இலவசமாக வழங்கப்படும் எனவும் பிரதியமைச்சர் எஸ் எம் சந்ரசேன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, சீரற்ற கால நிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# சிவனொளிபாத யாத்திரை நாளை முதல் ஆரம்பம்



2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாத மலை யாத்திரை ஆரம்பிக்கப்படுவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த தகவலை சப்ரகமுவ சுமன சமன் தேவாலய பஸ் நாயக்கர் சுனில் சாந்த வீரசேகர வெளியிட்டுள்ளார்.

நாளை சிவனொளி பாத மலை யாத்திரை ஆரம்பமாவதுடன் சுமன சமன் தேவ விக்கிரகம் மற்றும் தேவாபரணங்கள் சிவனொளி மலை பீடத்தில் பிரதிட்டை செய்வதற்கு நாளை காலை எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இதேவேளை, குறித்த விக்கிரகம் மற்றும் தேவாபரணங்கள் நேற்றிரவு 7.00 மணி தொடக்கம் பெல்மடுல்ல - கல்பொத்தாவல விகாரையில் தரிசனத்திற்காக வைக்கப்படவுள்ளன. இதுதவிர, அண்மையில் சிவனொளிபாத மலைக்கு அருகாமையில் அடையாளம் காணப்பட்ட புத்த பகவான் வசித்ததாக கருதப்படும் குகையும் இம்முறை யாத்திரிகர்கள் தரிசனத்திற்காக திறந்து வைக்கப்படவுள்ளது.

# படகு அகதிகள் நடுக்கடலில் தத்தளிப்பு

இந்தோனேஷிய கடற்பரப்பில் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நிர்க்கதியாகியுள்ளனர். 40 பேரைக் கொண்ட இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களைக் கொண்ட படகு ஒன்று இந்தோனேஷிய கடற்பரப்பில் நிர்க்கதியாகியுள்ளது.

இந்தப் படகில் பயணித்த புகலிடக் கோரிக்கையாளாகளை மீட்பதற்கு விசேட குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

படகின் என்ஜின் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உடல் நலக் குறைவினால் படகில் பயணித்த சிலர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவுஸ்ரேலியாவிற்கு புகலிடம் கோரும் நோக்கில் பயணித்த படகா இது என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.


# இத்தாலி நோக்கி ரணில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு இத்தாலிக்கு பயணமாகியுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறியுள்ள இவ்விருவரும், மீண்டும் ஜனவரி 3 ஆம் திகதியே நாடு திரும்புவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியாவை வீழ்த்தியது பாகிஸ்தான் 5 விக்கெட்டுக்களால் அபார வெற்றி



(பெங்களூர்)

பாகிஸ்தான் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து இரண்டு 20 ஓவர் போட்டி மற்றும் மூன்று ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. 20 ஓவர் போட்டிகளில் முதல் ஆட்டம் சின்னசாமி ஸ்டேடியத்தில் நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் முகமது ஹபீஸ், இந்தியாவை துடுப்பெடுத்தாட அழைத்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 133 ஓட்டங்களைப் பெற்றது. கம்பீர் 43, ர்கானி 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

பாகிஸ்தான் தரப்பில் உமர் குல் 3 விக்கெட்டுகளும், சயீத் அஜ்மல் 2 விக்கெட்டுகளும் எடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 12 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டுகளை இழந்தது. நசீர் ஜாம்ஷெட் 2 ஓட்டங்களிலும், அகமது ஷேஜாத் 5 ஓட்டங்களிலும் புவனேஷ்குமார் ஓவரில் ஆட்டமிழந்தனர். இந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் உமர் அக்மலையும் டக் அவுட் ஆக்கினார் புவனேஷ்குமார்.,

தடுமாற்றத்துடன் இலக்கை நோக்கி பயணித்த பாகிஸ்தான் அணியை முகமது ஹபீஸ் - சோயிப் மாலிக் ஜோடி சரிவில் இருந்து மீட்டதுடன் வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது.

இறுதியில் 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இறுதி ஓவர்களில் விறுவிறுப்பாக இருந்த போட்டியில் 3 பந்துகளில் 6 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையிலிருந்த பாகிஸ்தான் அணி இறுதியாகப் பெற்ற சிக்ஸர் மூலம் வெற்றிவாகை சூடியது. இதில் ஹபீஸ் 61, மலிக் 57 ஓட்டங்களைக் குவித்தனர்.

ஆட்டநாயகன் விருது முகமது ஹபிஸுக்கு வழங்கப்பட்டது.

# மன்னாரில் தொடரும் அடை மழை; மக்கள் பெருமளவில் இடம்பெயர்வு

(அச்சுவேலி)

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனத்த மழை காரணமாக நானாட்டான், முசலி மற்றும் மன்னார் பிரதேச செயலர் பரிவுகளிற்குட்பட்ட நூற்றுக் கணக்கான குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாக மன்னார் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக நானாட்டான் மற்றும் முசலி பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மடுக்கரை, நீலமடு, அரிப்புத்துறை, இசைமாலைத்தாழ்வு, பரிகாரிகண்டல் போன்ற பல்வேறு பிர்தேசங்களில் வெள்ளநீர் கரைபுரண்டு தொடர்ச்சியாக ஓடிக்கொண்டிருப்பதனால் வீடுகளினுள் வெள்ளநீர் உட்புகுந்து பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்தியிருப்பதால் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர். இவ்வாறு வெளியேறிய மக்கள் பாடசாலைகள், ஆலயங்கள், பொது நோக்கு மண்டபங்கள் போன்ற பல்வேறு இடங்களில் தங்கியுள்ளனர்.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் நானாட்டான் மகாவித்தியாலயம், நானாட்டான் பிரசேத்திலுள்ள ஆலயங்கள் போன்றவற்றில் தங்கியுள்ளனர். இவ்வாறு இடம் பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு நானாட்டான் கிராம மக்கள் சமைத்த உணவுகள், உலர் உணவுகள் போன்றவற்றை பொதுமக்களிடம் இருந்து சேகரித்து கொடுத்து வருவதுடன் தம்மாலான பிற உதவிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் மன்னார் நகரப் பகுதியிலும் வங்காலை, நறுவிலிக்குளம், அச்சங்குளம், வஞ்சியன் குளம் போன்ற ஏனைய பல கிராமங்களிலும் வெள்ளநீர் தொடர்ந்தும் தேங்கிய வண்ணம் இருப்பதால் அப்பகுதி மக்கள் தமது அன்றாடக் கருமங்களைக் கூட நிறைவேற்றுவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அத்துடன் தம்பனைக்குளம், கட்டையடம்பன் போன்ற பகுதிகளில் வீதிக்கு குறுக்காக வெள்ளநீர் பாரியஅளவில் பாய்ந்தோடுவதால் மன்னார் நகரிலிருந்து பிற இடங்களுக்கான வாகனப் போக்குவரத்துக்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)


**NALIN INFORMATION TECHNOLOGIES**

NALIN Information Technologies Pvt Ltd

195/2, Palaly road, Parameswara Junction, Jaffna.

TP-0212221166 / 0777667974

**நளின் நிறுவனத்தின் அறிவித்தல்**

எமது நிறுவன உத்தர வாதம், திருத்த வேலைகளை, சேவைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் எம்மிடம் 2011, 2012, ஆகிய காலப்பகுதியில் ஒப்படைத்த கணனி, கணனி உதிரிப்பாகங்களை உரிய பற்றுச்சீட்டு, உத்தரவாத பற்றுச்சீட்டு என்பவற்றை காட்டி 26.12.2012 தொடக்கம் 13.1.2013 வரையான காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு- எமது நிறுவன உத்தரவாத முத்திரை பொறிக்கப்பட்ட கணனி உதிரிப்பாகங்களை நீங்கள் எந்த நிறுவனத்தில் கொள்வனவு செய்திருந்தாலும் அதற்கான உத்தரவாதத்தினை எம்மிடம் நேரடியாக பெற்றுக்கொள்ள முடியும்

(நிபந்தனையின் அடிப்படையில்)

(C/2232)


இப்பக்கிரிகை இல.373 பிரகான வீகி. யாம்ப்பாணம் என்னும் மகவரியில் அமைங்குள்ள அர்பகன் அச்சகக்கில் 2012 மசம்பர் 26 ஆம் கிககி அச்சிட்டு வெளியிடப்பட்டகு.